






# வேதாகம நாட்டின் வாழ்க்கை முறைகள்

J. விக்டர் சுந்தரராஜ்



# வேதாகம நாட்டின் வாழ்க்கை முறைகள்

J. விக்டர் சுந்தரராஜ்

மோரியா
ஊழியங்கள்

தபால் பெட்டி எண் 2540, சென்னை - 600 030.

# வேதாகம நாட்டின் வாழ்க்கை முறைகள்

*ஆசிரியர்*
**J. விக்டர் சுந்தரராஜ்**

**Manners & Customs of Bible Land**
**© Moriah MInistries 2008**
**Publication No. 011**

ISBN 978-81-907600-0-9

*Published by*
**Moriah Ministries**
In collaboration with
**DAVINCO Publications -2**
42, John Vasu Street, Chennai 600 051.

Post Box No. 2540,
Shenoy Nagar, Chennai - 600 030, India
Email: <moriahministries@gmail.com>
Phone: 91-044-2664 5010

**Moriah Ministries**
C/o Bethany Gospel Hall
16, North St., Mannarpuram, Tiruchirapalli - 620 020,

Typeset & Cover Design: Moriah Ministries.

*Printed at :*
**J.R. PRINTECH**
26-D, V.O.C. Colony, Anna Nagar East, Chennai - 600 102
Ph : 26631643 Cell : 98410 77931

# முன்னுரை

“வேதாகம நாட்டின் வாழ்க்கை முறைகள்” என்ற இப்புத்தகம், பரிசுத்த வேதாகமத்தை நேசித்து, தியானிப்பவர்களுக்கு கிடைத்திருக்கிற ஒரு சிறந்த துணை நூலாக அமைந்துள்ளது. வேத வாக்கியங்களைத் தியானிக்கிறவர்கள் அதன் உண்மைகளைச் சரியான முறையில் அறிந்து கொள்ள வேண்டுமென்பதே தேவனுடைய விருப்பமாகும். அதில் மறைந்துள்ள ஆவிக்குரிய சத்தியங்களை வெளிப்படுத்த, அதன் பின்னணியில் ‘கருவாக’ இருக்கிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்து, மனிதனாக பாலஸ்தீன தேசத்தில் வாழ்ந்த நாட்களில், அக்கால மக்களின் நடைமுறை வாழ்க்கையின் பழக்க வழக்கங்களை மனதில் கொண்டு, அதின் மூலமாக ஆவிக்குரிய சத்தியங்களை வெளிப்படுத்தியுள்ளார். இன்றைக்கு வாழ்ந்து கொண்டிருக்கிற நாம் வேதாகம நாட்டின் பண்பாடு, பழக்க வழக்கங்களை அறிந்து வேத வசனத்தைப் படித்தால் மட்டுமே அதன் உண்மையான கருத்தை உள்ளவாறு அறிந்து கொள்ள முடியும். இதை மனதில் கொண்டு அருமையான நம் சகோதரர், ஜே. விக்டர் சுந்தர்ராஜ் அவர்கள் இப்புத்தகத்தை எழுதி தமிழ் கிறிஸ்தவ உலகிற்கு அளித்துள்ளார்கள். இது அவர்களுடைய நீண்டகால கர்த்தருடைய ஊழிய அனுபவத்தில் எழுந்த ஒரு மைல் கல் என்றால் மிகையாகாது.

ஒரு பள்ளிக்கூட ஆசிரியராக தன் வாழ்க்கையைத் தொடங்கிய இவ்வாசிரியர், கிறிஸ்தவ இலக்கிய ஊழியத்தில் ஏறக்குறைய அரை நூற்றாண்டு காலம் முழுநேரமாக ஈடுபட்டு, ஒரு சிறந்த வேதாகம

ஆசிரியராக தொண்டாற்றி வந்துள்ளார். ஒரு வேதாகம மாணவனுக்கு என்ன தேவை என்பதை நன்றாக நிதானித்து அறிந்தவராவார்.

வேதாகம நாட்டு மக்களின் குடியிருப்பு, உணவு, உடை, தொழில், கல்வி, குடும்ப வாழ்க்கை, பழக்க வழக்கங்கள் இவைகளை அறிந்தாலொழிய பரிசுத்த வேதாகமத்தில் உவமைகளாக கூறப் பட்டுள்ள சத்தியங்களை அறிந்துகொள்ள இயலாது. இவ் வறியாமை, வேத வசனத்தைத் தவறான முறையில் விளங்கிக் கொள்ள வழி நடத்திவிடும். இக்குறையை அகற்றி, கர்த்தருடைய வசனத்தைச் சரியான முறையில் விளங்கிக்கொள்ள ஏதுவாக இப்புத்தகம் அமைந்துள்ளது. இன்னும் அதிகமாக வேதாகம நாட்டின் பழக்க வழக்கங்களை அறிந்து வேத வசனங்களை அறிய வேண்டும் என்ற ஆவலை இப்புத்தகத்தைப் படிப்பவர்களின் உள்ளத்தில் ஏற்படுத்தும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

ஆசிரியர் விக்டர் சுந்தரராஜ் அவர்கள், தமிழ் கிறிஸ்தவ உலகிற்கு, ஈடு இணையில்லா தேவ பணியில் தொடர்ந்து ஈடுபட்டு செயலாற்ற வாழ்த்துகிறேன்.

E. ரவிக்குமார் M.A., M.Phil

ஆசிரியர்

'ஸ்தானாபதி'

(தமிழ் கிறிஸ்தவ குடும்ப மாத இதழ்)

# ஆசிரியர் உரை

கடந்த 25 ஆண்டுகளாக, முதலில் A.B.T (Assembly Bible Training Institute) யிலும் பின்னர் S.B.C (Steward Bible College) யிலும் நான் இந்தப் பாடத்தை வேத மாணாக்கர்களுக்குச் சொல்லிக்கொடுத்துள்ளேன். வேதாகமத்திலுள்ள வசனங்களில் மெய்ப்பொருளை விளக்குவதற்கு இப்பாடம் அதிக பயனுள்ளதாக இருந்தது. இவைகளை விசுவாசிகளும் படித்துப் பயனடைய வேண்டும் என்ற நோக்கத்துடன் தமிழில் மொழி பெயர்த்து வெளியிட வேண்டுமென தீர்மானித்து இதை வெளியிடுகிறேன்.

ஆங்கிலத்திலிருந்த இந்தப் பாடங்களை சாம் பிச்சை M. Sc அவர்கள் தமிழில் பெயர்த்ததை சகோதரர் மாணிக்கவாசகம் அவர்கள் சரிபார்த்து புதிப்பித்து உதவினார்கள். சகோதரர் ஜான் ஜெயானந்தம் இதை வடிவமைத்துப் படங்களுடன் மோரியா ஊழியங்கள் மூலம் வெளியிடவும் சம்மதித்தார்கள். இவர்களுக்கும், இதனை வெளியிட உதவிய ஏனையோருக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்புத்தகம் எழுத உறுதுணையாக இருந்த நூற்களாவன: "Manners and Customs of Bible Land", Moody Press, U. S. A, "Insight into Bible Times and Customs", Back to Bible Broadcast, U. S. A.

இதன் மூலம் விசுவாசிகள் பக்தி விருத்தியடையவும் ஆண்டவரின் நாமம் மகிமைப்படவும் ஜெபிக்கிறேன்.

ஜே. விக்டர் சுந்தரராஜ்

# ஆசிரியர் உரை

கடந்த 25 ஆண்டுகளாக, (முதலில் A.B.T (Assembly Bible Training Institute) யிலும் பின்னர் S.B.C (Stewart Bible College) யிலும் நான் [illegible]

[illegible] M. Sc [illegible]

[illegible] "Manners and Customs of Bible Lands" Moody Press, U. S. A. "Insight into Bible Times and Customs", Back to Bible Broadcast, U.S.A.

[illegible]

[illegible]

# பொருளடக்கம்


| | |
|---|---|
| 1. குடியிருப்புகள் | 01 |
| 2. உணவு | 07 |
| 3. அணிகலன்களும் ஆபரணங்களும் | 11 |
| 4. தொழில்கள் | 15 |
| மேய்ப்பர் | 15 |
| விவசாயம் | 19 |
| தோட்டக்கலை | 25 |
| பிற தொழில்கள் | 31 |
| 5. பண்பாடு | 35 |
| கல்வி | 35 |
| திருமணம் | 38 |
| கால்களைக் கழுவுதல் | 40 |
| மரணம் | 41 |
| தேவாலயமும் ஜெபாலயமும் | 44 |
| நகர வாசல் | 45 |
| 6. அரசங்கம் | 48 |
| 7. யூத சமுதாயம் | 50 |
| 8. யூதருடைய பண்டிகைகள் | 52 |

# படையல்

பூமியும் அதின் நிறைவுக்கும்,

உலகத்திற்கும் அதிலுள்ள குடிகளுக்கும்

உரியவரான கர்த்தருக்கு அர்ப்பணம்.

(சங்கீதம் 24:1)

## ஆரம்ப உரை

பாலஸ்தீன நாட்டினை மேலை நாடு என்றும் பலநகரங்களைக் கொண்டது என்றும் பலர் எண்ணுகின்றனர். ஆனால், அது ஒரு கீழைநாடு, பெரும்பாலும் சிற்றூர்களைக் கொண்டதாகவே திகழ்ந்தது. அங்கே வேளாண்மை புரிவோரும் மேய்ப்பர்களுமே வாழ்ந்தனர். இந்தப் பாலஸ்தீன மக்களின் பழக்க வழக்கங்களையும், பாரம்பரியங் களையும், வாழ்க்கை முறைகளையும் பிறநாட்டினர் அறியாதிருக்கின் றனர். அவற்றை அறிந்து கொள்வது வேதாகமத்தைச் சற்று நல்ல முறையில் விளங்கிக்கொள்வதற்குப் பேருதவியாக இருக்கும். இந்நிலையில் இச்சிறுநூல் அவர்களுடைய பண்பாட்டினையும், பழக்க வழக்கங்களையும் நமக்கு எடுத்துக்காட்டுகிறது.

## 1. குடியிருப்புகள்

### அ. கூடாரங்கள்


ஆதாளின் மகன் யாபால், கூடாரங்களில் குடியிருந்தவர்களின் ஆதித் தகப்பன் (ஆதி. 4:20). நோவா, திராட்சை ரசம் குடித்து வெறித்து, தன் கூடாரத்திலே ஆடை விலகிப் படுத்திருந்தான் (ஆதி. 9:21). ஆபிரகாம் வெயில் நேரத்தில், கூடார வாசலில் உட்கார்ந்து கொண்டிருந்தான் (ஆதி. 18:1).

ஆதிகாலத்திலிருந்து, கூடாரமே மக்களின் குடியிருப்பாக இருந்தது. ஆபிரகாமின் மகன் ஈசாக்கு, கூடாரங்களில் குடியிருந்தான். ஈசாக்கு அங்கிருந்து புறப்பட்டுப் போய், கேராரின் பள்ளத்தாக்கிலே, நகரத்துக்கு முன்பாக, தன் கூடாரத்தைப் போட்டு, குடியிருந்தான் (ஆதி. 26:17). யாக்கோபு பதான் அராமிலிருந்து வந்து, நகரத்துக்கு முன்பாகக் கூடாரம் போட்டான் (ஆதி. 33:18). ஆதி முன்னோர்கள் கூடாரங்களிலே குடியிருந்தார்கள். விசுவாசத்தினாலே, ஆபிரகாம் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திலே (பரதேசி) நாடோடியைப்

போல், ஈசாக்கோடும், யாக்கோபோடும், கூடாரங்களிலே வாழ்ந்தான் (எபி. 11:9). அவர்கள் பர்தேசிகளாய் இருந்தார்கள். நிலையான குடியிருப்பு அவர்களுக்கு இல்லை. இஸ்ரவேல் மக்கள் 40 ஆண்டுகள், வனாந்திரத்திலே அலைந்து, திரிந்து, கூடாரங்களிலே குடியிருந்தார்கள்.

ஆடு மற்றும் ஒட்டகத்தின் உரோமத்தினால் இக்கூடாரங்களைச் செய்வார்கள். உரோமத்தைக் கயிறுகளாக முறுக்கிப் பின்னுவார்கள். பின்னிய பகுதிகளை ஒன்றோடொன்று இணைப்பார்கள். அவை மழையில்நனைந்து, வெயிலில் காய்ந்து நீர் ஒழுகாவண்ணம் உறுதிப்படும்.

இரண்டு பகுதிகளாகக் கூடாரத்தை அமைப்பார்கள். முதலாவது புழக்கத்திற்கான பகுதியாகும். இரண்டாவது பகுதி சமையலறையாகவும், பெண்கள் தங்கும் பகுதியாகவும் விளங்கும். ஒரு தடியைக் குறுக்காக வைத்து அதின்மேல் கம்பளியைத் தொங்க விட்டு இவ்விரு பகுதிகளையும் உண்டாக்குவார்கள். இவ்வகையில் ஒரு கூடாரத்தை மூன்று அல்லது நான்கு பகுதிகளாகவும் எளிதில் விரிவுபடுத்தலாம். அவர்களது பொருளாதார நிலையையும், குடும்பத்தின் எண்ணிக்கையையும் பொருத்து கூடாரம் விரிவாக்கப்படும்.



கூடாரத்தின் சமையலறைப் பகுதியிலே பெண்கள் இருப்பதால் வெளியாட்கள் வரும்போது அவர்களைக் காணமுடியாது. என்றாலும், முன் அறையில் பேசும் பேச்சுகளை எளிதில் கேட்கமுடியும். அந்தப்படியே தேவதூதர்களும், ஆபிரகாமும் பேசியதை சாராள் ஒட்டுக்கேட்டாள் (ஆதி. 18:10-15).

சாய்ந்து அமர்வதற்கான வட்டவடிவத் திண்டுகளையும், தலையணைகளையும் மற்றும் மெத்தைகளையும் கூடாரத்தில் காணலாம். இரவு நேரங்களில் உறங்குவதற்கும் இவற்றையே பயன்படுத்துவர்.

புதிய ஏற்பாட்டுக் காலத்தில், கூடாரங்கள் செய்வது ஒரு மேன்மை யான தொழிலாகக் கருதப்பட்டது. கம்பளிப் போர்வைகள், கம்பங்கள் (தடிகள்), முளைக்குச்சிகள், கட்டுவதற்கான நார்க்கயிறு ஆகியவை செய்வதும் இத்தொழிலில் அடங்கும். பாலஸ்தீன நாட்டின் வெப்ப நிலைக்கு, கூடாரம் ஒரு பொருத்தமான உறைவிடம். கோடை காலத் தில் குளிர்ச்சியாகவும், குளிர் காலத்தில் வெதுவெதுப்பாகவும், தங்குவதற்கு வசதியாகவும் இருக்கும். பவுல் கொரிந்து பட்டணத்தில் இந்தக் கூடாரத் தொழிலைச் செய்தார்.

## ஆ. வீடுகள்


இஸ்ரவேல் மக்கள், கானான் தேசத்திற்கு வந்து சேர்ந்தபின், குடியிருக்க வீடுகளைக் கட்டினார்கள். நாடோடிகளாக இருந்த அவர்கள் வாழ்க்கை முறை மாறி ஓர் இடத்தில் நிலையாகத் தங்க ஆரம்பித்தார்கள். விவசாயத்திலும், கால்நடை வளர்ப்பிலும் ஈடுபட்டார்கள். எனவே, கூடாரங்கள், வீடுகளாக மாறின.

இந்தியாவின் சிற்றூர்களுக்கு ஒப்பாகவே, பாலஸ்தீனத்திலும் சாதாரணமாக ஓர் அறை வீடுகளைக் காணமுடியும். அந்த அறையே தங்கும் அறையாகவும், சமையல் அறையாகவும், படுக்கை அறையாகவும் ஏன் கால்நடைகளின் கொட்டமாகவும் பயன்படும். "பாவித்" என்னும் எபிரெயச் சொல் வீடு என்பதைக் குறிக்கும். பாதுகாப்பிடம், புகலிடம், அடைக்கலம் என்பதே இச்சொல்லின் பொருளாகும். பகல் முழுவதும் வெளியில் வேலை செய்யும் மக்கள், இரவில் தங்குவதற்கு மட்டுமே வீட்டிற்கு வருவார்கள்.

இந்த அறை வீட்டில், உயரமான பகுதியாகத் திண்ணை ஒன்று இருக்கும். அவர்கள் உட்காருவது, சாப்பிடுவது, தூங்குவது எல்லாமே இந்தத் திண்ணையில் தான். சமதளமான பகுதியில் இரவில் கால்நடைகள் கட்டப்படும். வீட்டின் மூலைப் பகுதி சமையல் அறை யாகப் பயன்படுத்தப்படும். சில வீடுகளின் முன் பகுதியில், திறந்த வெளி இருக்கும். சில வீடுகளின் உள்ளேயே கிணறு இருக்கும். இந்த திறந்த வெளிப் பகுதியில் கால்நடைகள் கட்டி வைக்கப்படும்.

ஆனால், சத்திரத்தில் பல அறைகளும் சுற்றுச் சுவரும், உள்ளே காலியிடமும் இருக்கும். இந்த இடத்தில் ஒட்டகங்களும் மற்ற மிருகங் களும், அவற்றை நடத்துபவர்களும் தங்குவார்கள். கால்நடைகளின் உரிமையாளர்கள் சத்திரத்தின் உள் அறையில் தங்குவர்.

இப்படிப்பட்ட சத்திரத்தின் உள்ளே திறந்த வெளிப்பகுதியில், மரியாளும், யோசேப்பும் தங்கியிருப்பார்கள். அவர்களுக்குச் சத்திரத்தில் இடம் கிடைக்கவில்லை. ஒருவேளை அவர்கள் கால்நடை களைக் கட்டி வைக்கும் ஒரே அறை வீட்டில் தங்கியிருக்கலாம். மரியாள் தன் முதற்பேறான குமாரனைப் பெற்று, துணிகளில் சுற்றி, முன்னணையில் கிடத்தினாள் (லூக். 2:7).



இந்தக் குழந்தையைப் பெற்றெடுத்த இடத்தின் தன்மைதான் என்னே! அது மரியாளுக்கும், யோசேப்புக்கும் சவுகரியக் குறைவான இடமும், சமுதாயத்தில் தரக்குறைவான நிகழ்ச்சியாகவும் இருந்தது. மகிமையின் தேவன் நமக்காக மனிதராகப் பிறந்த இடம் எவ்வளவு தாழ்மையானது; தரித்திரமானது பாருங்கள் (1 கொரி. 9:7).

பொதுவாக வீடுகள் மண்ணினாலும், மண்ணாலான செங்கல் களினாலும் கட்டப்பட்டன. செங்கற்களைச் சுடாமல், சூரிய ஒளியிலே காய வைப்பார்கள். தரையை நன்றாக அழுத்தி, சமப்படுத்தி, சிறிது வழுவழுப்பாகச் செய்வார்கள்.

**i. கூரைகள்** ஒரு சுவர் தொடங்கி மறுசுவர் வரை உத்திரங்களை அடுக்கி வைப்பார்கள். உத்திரங்களுக்கு இடையே காணப்படும் இடைவெளியை நாணல் அல்லது கோரை கொண்டு நிரப்புவார்கள். களிமண்ணையும் சிறு கற்களையும் குழைத்து அதன் மேலே

பூசுவார்கள். அதற்குப் பின் சுண்ணாம்புச் சாந்து கொண்டு நன்றாக மெழுகுவார்கள். சூரிய ஒளி அதன்மேல்பட்டு வெப்பத்தினால் அங்கு வெடிப்புகள் உண்டாகும். மழைக்காலத்தில் அதன் வழியாக மழைநீர் உட்புகுந்து கூரை நன்றாக நனைந்துவிடும். இருந்தாலும் நீர் உடனே ஒழுகாது. மழைநின்று வெகுநேரம் கழித்தும் நீர் சொட்டிக்கொண்டே இருக்கும். இது சண்டைக்காரிக்கு உவமையாக நீதிமொழிகள் நூலில் சொல்லப்பட்டுள்ளது. “அடைமழைநாளில் ஓயாத ஒழுக்கும் சண்டைக் காரியான ஸ்திரீயும் சரி” (நீதி. 27:15). சண்டைக்காரி சண்டையைச் சட்டென்று நிறுத்தாமல் தொடர்ந்து நச்சரிப்பாள், முறுமுறுப்பாள். உண்மையான கிறிஸ்தவன் நிதானத்தை இழக்கக்கூடாது. ஒருவேளை அதை இழந்து போனால் கூடிய விரைவில் நிதானத்திற்கு வந்து விடவேண்டும். அவ்வாறின்றி தனக்கும், பிறருக்கும் தொல்லை கொடுத்து வாழ்க்கையை வெறுப்பிற்குரியதாக்கிக் கொள்ளக்கூடாது.

வீட்டின் கூரை கால்நடைத் தீவனம் வைக்குமிடமாகவும் பயன்படும். தொழுகை மற்றும் ஜெபம் செய்யுமிடமாகவும், அறிவிப்புகள் செய்யுமிடமாகவும் அது பயன்படும். இதுவே, “நீங்கள் அறைகளிலே காதிலே சொன்னது எதுவோ, அது வீடுகளின் மேல் கூறப்படும்” என்று குறிப்பிடப்பட்டுள்ளது (லூக். 12:3).

**ii. வீட்டை அழகுபடுத்துதல்** ஏழைகளுடைய வீடுகளில் பாய்களும், பணக்காரர்களுடைய வீடுகளில் கம்பளியும் விரிப்பதற்குப் பயன்படுத்துவார்கள். அவை பகலில் உட்காருவதற்கும் இரவில் உறங்குவதற்கும் பயன்படும். மேலும் திண்டுகளை, சாய்ந்து அமர்வதற்கும், படுத்துக்கொள்வதற்குத் தலையணையாகவும் பயன்படுத்துவார்கள். பாத்திரங்கள் பொதுவாக, களிமண்ணால் செய்யப்பட்டவை. உலோகப் பாத்திரங்களை உபயோகிப்பது அரிது.


**iii. வீட்டுக்கு வெளிச்சம் (விளக்கு)** களிமண்ணால் செய்யப்பட்ட தட்டு போன்ற அகல் விளக்கில் ஒலிவ எண்ணையை ஊற்றி, திரியைப் பற்றவைத்து விளக்கைக் குறிப்பிட்ட ஓரிடத்தில் வைப்பார்கள். ஆனால் செல்வந்தர்களின் வீடுகளில் பித்தளை விளக்கைப் பயன்படுத்துவார்கள். அது ஒரு தண்டின் மேல் வைக்கப்படும். சில தண்டுகள் அலங்காரமாய் இருக்கும். ஆசரிப்புக் கூடாரத்தில் இருந்த விளக்குத் தண்டு தங்கத்தால் ஆனது. மிகவும் வேலைப்பாடுள்ளது. விளக்குத் தண்டு இல்லாத வீடுகளில், ஒரு கூடையைத் தலைகீழாய்க் கவிழ்த்



துப் போட்டு, அதன் மேல் விளக்கை வைப்பார்கள். விளக்கைக் கொளுத்தி மரக்காலால் மூடி வைக்காமல், விளக்குத் தண்டின்மேல் வைப்பார்கள். அப்பொழுது அது வீட்டிலுள்ள யாவருக்கும் வெளிச்சம் கொடுக்கும் (மத். 5:15).

விளக்கில் எண்ணெய் தீர்ந்து விட்டால், திரி கருகி, புகை வரும். அப்பொழுது திரியைத் தூண்டி விட்டுத் திரியை விரல்களால் கசக்கி, கரியை நீக்கி, பிறகு எண்ணெய் ஊற்றி, மறுபடியும் பற்றவைப்பார்கள். நமது இரட்சகரின் கிருபையுள்ள செய்கை இவ்விதமாய் வர்ணிக்கப்பட்டுள்ளது. அவர் நெரிந்த நாணலை முறியாமலும், மங்கியெரிகிற திரியை அணையாமலும் இருப்பார் (ஏசா. 42:3). அவர் உதவியற்றவர்களுக்கு உதவி செய்கிறவர். விழுந்து போனவர்களைத் தூக்கி விடுகிறவரும் அவரே. வீடுகளில் பொதுவாக இரவு முழுவதும் விளக்கு எரியும்.

வெளிச்சம் ஜீவனுக்கு (உயிருக்கு) அடையாளம். தேவரீர் என் விளக்கை ஏற்றுவீர். என் தேவனாகிய கர்த்தர் என் இருளை வெளிச்சமாக்குவார் (சங். 18:28). நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன். என்னைப் பின்பற்றுகிறவன், இருளிலே நடவாமல், ஜீவ ஒளியை அடைந்திருப்பான் (யோவா. 8:12). அவருக்குள் ஜீவன் இருந்தது. அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியாயிருந்தது (யோவா. 1:4). ஒளி எங்கே உண்டோ, அங்கே ஜீவன் உண்டு; மாறாக இருள் இருக்கும் இடத்தில் மரணம் இருக்கும். ■



## 2. உணவு

### அ. அப்பம்

வேதாகமத்தில் 'அப்பம்' என்று வாசிக்கும்போது, இக்காலத்தில் உள்ள ரொட்டியைப் (Bread) போன்று இருக்கும் என்று நாம் நினைக்கக் கூடாது. வேதத்தில் சொல்லப்பட்ட அப்பம், நாம் சாப்பிடும் சப்பாத்தி அல்லது ரொட்டியைப் போன்றது. தட்டையான வடிவில் செய்யப்படும் ரொட்டி தடியாகவோ மெல்லியதாகவோ இருக்கும். அது ஒலிவ எண்ணெய் அல்லது வெண்ணையால் செய்யப்படும். அப்பத்தைப் பாலாடைக்கட்டி, பழங்கள், காய்கறிகள், பயறு வகைகள் இவை களுடனும், அரிதாக இறைச்சியுடனும் சேர்த்துச் சாப்பிடுவார்கள். பணக்காரர்கள் கோதுமை ரொட்டியையும், ஏழைகள் பார்லி (வாற் கோதுமை) ரொட்டியையும் உண்பார்கள். ரொட்டியே அவர்களுக்கு முக்கியமான உணவு. அது புனிதமானதாகவும் கருதப்பட்டது. ஏனெனில் விதைப்பு, அறுவடை, வேகவைத்தல் (சமைத்தல்) ஆகிய செயல்கள் தேவனுடைய நாமத்தினால் செயப்பட்டன. ரொட்டியை கத்தியால் வெட்ட (அறுக்க) மாட்டார்கள். விரல்களால் பிய்த்து உண் பார்கள். ரொட்டி உயிருக்கு ஜீவநாடி. "ஜீவ அப்பம் நானே" என்று இயேசு சொன்னார் (யோவான் 6:35). அந்த வாசகத்தின் சரியான அர்த்தத்தை அப்போதைய மக்கள், புரிந்து வைத்திருந்தார்கள்.

**i திருகை** ஒன்றன்மேல் ஒன்றாக வைக்கப்பட்ட இரண்டு வட்ட வடிவான கற்களால் திருகை செய்யப்பட்டிருக்கும். திரிகையின் அடியில் உள்ள கல்லின்நடுவில் சுழலச்சு முளை இருக்கும். மேல்கல், தானியங்களைப் போடுவதற்குப் புனல் வடிவத்தில் நடுவில் ஒரு துவாரத்துடன் இருக்கும். ஒன்று அல்லது இரண்டு பெண்கள் மேல் கல்லைச் சுற்றுவார்கள். ஒரு கையால் சுற்றி, மறுகையால் தானியத்தை திரிகைக்குள் போடுவார்கள். அரைக் கப்பட்ட மாவு, திருகைக்கு அடியில் விரிக்கப்பட்டிருக்கும் செம்மறியாட்டுத் தோலிலோ, துணியிலோ வந்து விழும். "இரண்டு ஸ்திரீகள் ஏந்திரம் அரைத்துக் கொண்டிருப்பார்கள்,



ஒருத்தி ஏற்றுக் கொள்ளப்படுவாள், மற்றொருத்தி கைவிடப்படுவாள்” (மத். 24:41).

**ii. அடுப்பு** மண்ணால் செய்யப்பட்ட அடுப்பின் நடுவில் விறகை வைத்து எரிப்பதற்குக் குழிபோன்ற பகுதி இருக்கும். எரிந்து கொண்டிருக்கும் நெருப்பின் மேலே நேரடியாகவோ அல்லது அதற்கு மேல் வைக்கப்பட்ட வானலி சட்டியிலோ ரொட்டியைச் சுடுவார்கள். சிற்றூர்களில் பொதுவான இடத்தில் கிராமத்துச் சமையல்காரர்கள் அடுப்பை வைத்திருப்பார்கள். பெரிய கல்லினாலோ இரும்பினாலோ செய்யப்பட்ட தட்டில் ரொட்டியைச் சுடுவார்கள். கிராம மக்கள் அங்கு வந்து பணம் கொடுத்து தங்களுக்குத் தேவையான ரொட்டியைச் சுட்டுக்கொண்டு போவார்கள்.



**iii. எரிபொருளாகிய அக்கினித்தழல்** கிராமப்புற வீடுகளில் அடுப்புகள் சிறியதாக இருக்கும். வீடுகளில் அடுப்பைப்பற்ற வைக்கப் பொது அடுப்பிலிருந்து கங்குகளை அதாவது அக்கினித் தழலை வாங்கிச் செய்வார்கள். பொதுவாக, இந்த எரிபொருளை வாங்குவதற்கு வாலிபப் பெண் பிள்ளைகளை அனுப்புவார்கள். கங்குகளை உடைந்த மண்ணாலான தண்ணீர் ஜாடிகளில் வைத்து தலையின்மேல் சுமந்து வருவார்கள். “பிரியமானவர்களே, பழி வாங்குதல் எனக்குரியது. நானே பதில் செய்வேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறபடியால், நீங்கள் பழி வாங்காமல் கோபாக்கினைக்கு இடங்கொடுங்கள். அன்றியும், உன் சத்துரு பசியாயிருந்தால், அவனுக்குப் போஜனம் கொடு. அவன் தாகமாயிருந்தால், அவனுக்கு பானங்கொடு. நீ இப்படிச் செய்வதினால் அக்கினித் தழலை அவன் தலையின்மேல் குவிப்பாய்” (ரோமர் 12:19,20). அக்கினித் தழலைத் தலையில் குவித்தல் என்றால் என்ன அர்த்தம்? அது பழி வாங்குதலா? பின்வரும் வசனத்தைக் கவனியுங்கள். “நீ தீமையினாலே வெல்லப்படாமல், தீமையை நன்மையினாலே வெல்லு” (ரோமர் 12:21). உன் எதிரிக்கும், நன்மை செய்வதில் தாராளமாய் இரு. இதுவே அதனுடைய சரியான அர்த்தம். அக்கினித் தழல் தாராளமாகக்

கொடுக்கப்பட வேண்டும், கொஞ்சமாகக் கொடுத்தால் போகும் வழியில் அணைந்து போகும். தீமைக்குப் பதில் நன்மை செய். நன்மையைத் தாராளமாகச் செய்.

**iv. உண்ணுதல்** ரொட்டியில் கொஞ்சத்தைக் கையால் பிய்த்து அதனை மடக்கியோ சுருட்டியோ, பொதுவான பெரிய பாத்திரத்திலிருக்கும் சாற்றைத் (குழம்பைத்) தொட்டுச் சாப்பிடுவார்கள். சாதாரணமாக இறைச்சியை அகலமான பெரிய தட்டில் வைத்திருப்பார்கள். அதனைக் கையில் எடுத்து உண்பார்கள். போவாசின் வயலிலே, கதிர்களைப் பொறுக்க, ரூத் போனாள். சாப்பாட்டு வேளையில், அவன் ரூத்திடம், "நீ இங்கே வந்து, இந்த அப்பத்திலே புசித்து, காடியிலே உன் துணிக்கையைத் தோய்த்துக்கொள்" என்று கூறினான் (ரூத் 2:14).

ஆண்டவராகிய இயேசு, தனக்கு அன்பான சீஷனிடம், தம்மைக் காட்டிக் கொடுக்கப் போகிற சீஷனைக் குறிப்பாக அடையாளம் காட்டினார். என்னோடே கூட தாலத்தில் கையிடுகிறவனே என்னைக் காட்டிக் கொடுப்பான் என்றார் (மத். 26:23). அவர் கூறியது யாரைக் குறிக்கிறது என்று முதலில் தெளிவாக இல்லை. ஏனென்றால், எல்லாருமே பொதுவான பாத்திரத்தில் கையிட்டார்கள். நான் இந்தத் துணிக்கையைத் தோய்த்து எவனுக்குக் கொடுப்பேனோ அவன்தான் என்று இயேசு கிறிஸ்து சொன்ன பின்புதான், அது தெளிவாயிற்று (யோவான் 13:26). யூதாஸ்காரியோத்துக்கு துணிக்கையின் சிறப்பான பகுதியை அவர் கொடுத்ததின் மூலம், அவனை எதிரியாக எண்ணுவதற்கு மாறாகச் சிறப்பு விருந்தினராகவே கனப்படுத்தினார். நண்பனைப் போல, மரியாதையாக நடத்தினார். அவன் அறிவடைய வேண்டும் என விரும்பி, இயேசு அப்படிச் செய்தார். தன் பாவத்தின் அகோரத்தை அவன் உணர வேண்டுமென்ற விருப்பத்துடன் அவ்வாறு செய்தார்.

**v. உட்காரும் முறை** வட்டமாக அல்லது அரைவட்டமாக உட்கார்ந்து யூத மக்கள் சாப்பிடுவார்கள். கால்களை மடக்கி, பின்புறமாக நீட்டி, இடது கையைத் தரையில் ஊன்றிக்கொண்டு, வலது கையால் எளிதாக அப்பத்தை எடுத்து உண்பார்கள். இப்படி உட்கார்ந்து சாப்பிடும்போது, இரண்டாவது உட்கார்ந்திருக்கும் விருந்தினரின் மார்பு, முதல் விருந்தினரின் மார்புக்கு பக்கமாகவும், எதிர்ப்புறமாகவும் இருக்கும். இப்படித்தான், இயேசு கிறிஸ்துவின் அன்புக்குரிய சீஷன் யோவான், அவருடைய மார்பில் சாய்ந்து

கொண்டிருந்தான் (யோவான் 13:23). வெளியிலிருந்து வருபவர் எவரும், விருந்தினர்களுக்கோ, விருந்துக்கோ இடைஞ்சல் இல்லாமல், அவர்களின் பாதங்களைத் தொடமுடியும். பாவியான ஒரு பெண், இயேசுவுக்குப் பின்னால் நின்று கொண்டு, அவருடைய பாதங்களைக் கண்ணீரால் நனைக்கவும், தன்னுடைய தலைமுடியால் துடைக்கவும் செய்தாள் (லூக். 7:38).

**vi. சாப்பிடும்போது உட்கார வேண்டிய ஒழுங்கு** விருந்தினர்கள் வட்ட வடிவத்திலோ அல்லது அரைவட்ட வடிவத்திலே உட்காரு வார்கள். உபசரிப்பவர் நடுவில் உட்கார்ந்திருப்பார். அவருக்கு வலது புறம் உட்கார்ந்திருப்பவருக்கு முதலாவது ஸ்தானத்திற்கும் இடது புறம் உட்கார்ந்திருப்பவர், அடுத்தபடியான மரியாதைக்கும் உரியவர். கர்த்தருடைய ராஜ்ஜியத்தில் இப்படிப்பட்ட முக்கியமான முதலாவது மற்றும் இரண்டாவது இடங்களில் தங்களை அமர வைக்கும்படியாக செபெதேயுவின் குமாரராகிய யாக்கோபும், யோவானும் வேண்டிக் கொண்டார்கள். உமது மகிமையிலே, எங்களில் ஒருவன் உமது வலது பாரிசத்திலும், ஒருவன் இடது பாரிசத்திலும் உட்கார்ந்திருக்கும்படி எங்களுக்கு அருள் செய்யவேண்டும் என்று அவர்கள் அவரிடம் சொன்னார்கள் (மாற். 10:37).


பொதுவாக, யூதர்கள், விருந்துகளில் ஒரு குறிப்பிட்ட ஒழுங்கின் படி உட்கார்ந்து சாப்பிடுவார்கள். விருந்துக்கு அழைக்கப்படும்போது, முதன்மையான இடத்தில் உட்காராமல், தாழ்ந்த இடத்தில் உட்கார வேண்டும் என்று ஆண்டவர் அவர்களுக்குப் போதித்தார். "நீ விருந் துக்கு அழைக்கப்படும்போது, போய் தாழ்ந்த இடத்தில் உட்காரு. அப் பொழுது உன்னை அழைத்தவன் வந்து, சிநேகிதனே, உயர்ந்த இடத்தில் வாரும் என்று சொல்லும்போது, உன்னுடனே கூடப் பந்தி யிருக்கிறவர்களுக்கு முன்பாக உனக்குக் கனமுண்டாகும்" (லூக். 14:10). ■

# 3. அணிகலன்களும் ஆபரணங்களும்

## அ. உடைகள்

மக்கள் உடையணிதலில் அதிக வேறுபாடு காணப்படவில்லை. துணி, கம்பளியாலோ, செயற்கை நூலாலோ உண்டாக்கப்படும். தற்காலத்திலே, பஞ்சினாலே செய்யப்படுகிறது. இரண்டு பகுதிகளைக் கொண்ட உடையில் ஒன்று உள்ளாடை. அது குட்டையாகவும், கையில்லாமலும் இருக்கும். அது முழங்கால் அல்லது கணுக்கால் வரை இருக்கும். வெளி உடை நீளமாகவும், கைவைத்தும் இருக்கும். வேலை செய்வோரின் வெளி உடை குட்டையாகவும், பணக்காரர்கள் உடை நீளமாகவும் இருக்கும்.


**i. இடுப்புக் கச்சை** ஒருவருடைய உடையில் இடுப்புக் கச்சை (Belt) மிகவும் பயனுள்ளதாகும். தோலினால் செய்யப்பட்டிருக்கும் இக்கச்சை ஆடையை உடலோடு இறுக்கிச் சேர்ப்பதால், அவரால் எளிதாகத் தடையின்றி நடக்க முடியும். சில கச்சைகள் சித்திர வேலைப்பாடுகளுடனும் கூடியதாகவும் கையளவு அகலம் உள்ளதாகவும் இருக்கும். பணம், பட்டயம் மற்றும் சில பயணத்திற்குத் தேவையான பொருட்களையும் எடுத்துச் செல்ல அது உதவும். அப்சலோமைக் கண்ட மனிதனிடம், யோவாப் "நீ அதைக் கண்டாயே, பின்னே ஏன் அவனை அங்கே வெட்டி, தரையிலே தள்ளிப் போடவில்லை? நான் உனக்குப் பத்து வெள்ளிக்காசையும், ஒரு கச்சையையும் கொடுக்கக் கடமைப்பட்டவனாயிருப்பேனே" என்றான் (2 சாமு. 18:11). தாவீது தன் மனிதர்களிடம், "அவனவன் தன் பட்டயத்தை எடுத்துக் கொள்ளக்கடவன்" என்றான் (1 சாமு. 25:13). "வழிக்குப் பையையாகிலும், அப்பத்தையாகிலும், கச்சையில் காசையாகிலும் எடுத்துக்கொண்டு போகாமல், ஒரு தடியை மாத்திரம் எடுத்துக் கொண்டு போகவும்" என்று இயேசு கிறிஸ்து தம் சீடர்களிடம் கூறினார் (மாற்கு 6:8). இவ்வசனங்கள் வார்க்கச்சையின் பயன்களை எடுத்தியம்புகின்றன.





**ii. வெளி ஆடை** கம்பளியினால் செய்யப்பட்ட வெளி ஆடை, மேலங்கியாகப் பயன்படும். இது பெரிய விரிப்பாகக் காணப்படுவதால் ஒருவருக்கு காற்று, வெயில், மழை ஆகியவற்றிலிருந்து நல்ல பாதுகாப்பைத் தரும். மேலும் இரவிலே படுக்கை விரிப்பாகவும் மூடிக்கொள்ள போர்வையாகவும் அது பயன்படும். ஏனெனில், பாலஸ்தீனா தேசத்திலே இரவிலே அதிக குளிராகவும், பகலிலே அதிக வெப்பமாகவும் இருக்கும்.

ஆகவே ஒரு ஏழை மனிதனிடமிருந்து, வெளி ஆடையை எடுத்துக் கொள்ளக்கூடாது என்று கட்டளை கொடுக்கப்பட்டது. "பிறனுடைய வஸ்திரத்தை ஈடாக வாங்கினால், பொழுது போகுமுன்னமே, அதை அவனுக்குத் திரும்பக் கொடுத்து விடுவாயாக. அவன் போர்வை அது தானே. அதுவே அவன் தன் உடம்பை மூடிக்கொள்ளுகிற வஸ்திரம். வேறு எதினாலே போர்த்துப் படுத்துக் கொள்ளுவான்? அவன் என்னை நோக்கி முறையிடும்போது, நான் அவனுக்குச் செவிகொடுப்பேன். நான் இரக்கமுள்ளவராயிருக்கிறேன்" (யாத். 22:26,27). ஏழைகளைப் பற்றியும், ஒடுக்கப்பட்டவர்களைப் பற்றியும் கர்த்தர் கரிசனை உள்ளவராயிருக்கிறார். பொதுவாக, வெளி ஆடைகள், மார்பை ஒட்டிய பகுதியில் மடிப்புகள் இருக்கும். அந்த மடிப்பில் அநேக பொருள்களைக் கொண்டு போகலாம். தானியத்தை இப்படித்தான் கொண்டு போவார்கள். "கொடுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும். அமுக்கிக் குலுக்கி, சரிந்து விழும்படி, நன்றாய் அளந்து, உங்கள் மடியிலே போடுவார்கள்" (லூக். 6:38). பெண்கள் அணியும் வெளியாடைகள் சற்று வித்தியாசமானதாக இருக்கும். அது சற்று நீளமாகவும், மெல்லியதாகவும் இருக்கும்.



**iii. ஆண்களுக்கான தலைப்பாகை** பொதுவாக, ஆண்கள் வெளியே போகும் போது, தலைப்பாகை அணிவார்கள். இல்லையெனில் வெப்பத் தாக்குதலுக்கு ஆளாக நேரிடும். அது அவர்களுக்கு



மரணத்தையும் வருவிக்கக் கூடும். அது நீண்ட கனமான துணியில் ஆனதாக இருப்பதால் அதைத் தலையில் பலமுறை சுற்றிக் கட்டு வார்கள். ஆண்களுக்குத் தலைப்பாகை நல்ல தொரு பாதுகாப்பு.

**vi. பெண்களுக்கான முக்காடு** அவர்கள் வேலைப்பாடுள்ள அலங்காரமான ஒரு உயர மான தொப்பியை தலையில் அணிவார்கள். அவர்கள் தங்கள் முகங் களை மறைத்துக் கொள்ள சிறப்பான முறையில் தொப்பியோடு இணைந்த முக்காட்டை அணிவார்கள். அது கீழை நாட்டின் வழக்கம்.



பெண்களோடு இருக்கும்போது, அந்த முக்காட்டை பின்னால் போட்டுக் கொள்வார்கள். எதிரே ஆண் கள் வரும்போது முக்காட்டை முன்பக்கம் போட் டுக்கொள்வார்கள். ரெபேக்காள் தன் கண்களை ஏறெடுத்து, ஈசாக்கைப் பார்த்தாள். அவர்தான் தனது எஜமான் என்று வேலைக்காரன் சொன்னவுடன், அவள் முக்காட்டைப் போட்டுக் கொண்டாள் (ஆதி. 24:65).

## ஆ. இயேசு கிறிஸ்துவின் உடை


இயேசு கிறிஸ்து, ஒரு தலைப்பாகை அணிந்திருக்கக் கூடும். அது யூத தேச உடையின் ஒரு பகுதி. ஓவியர்களின் கற்பனையால் வரைந்த, இயேசு கிறிஸ்துவின் உருவப்படத்தை நாம் பார்த்திருக்கிறோம். அவர்கள் முழுவதும் சரியான யூதமுறையின்படி படத்தை வரைய வில்லை. அவருக்கு நீண்ட முடியும், வாரிவிடாத தாடியும் இருந்திருக் கலாம். அவர் உள்ளாடை அணிந்திருந்தார். அவருடைய வெளி ஆடை (மேலாடை) தையலில்லாமல், ஒரே அங்கியாக இருந்தது. அது தொளதொளப்பான ஆடையாயிருந்தது. தமது இடுப்பைச் சுற்றி ஒரு கச்சை கட்டியிருந்தார். காலுக்குச் செருப்பும், கையில் ஒரு கோலும் வைத்திருக்கக் கூடும்.

## இ. ஆபரணங்கள்

**i. பொன் ஆபரணங்கள்** பெண்கள் காதணிகள் அணிவார்கள். யாக்கோபின் குடும்பத்தார், அங்கே தங்கள் கையிலிருந்த எல்லா அந்நிய தெய்வங்களையும், தங்கள் காதணிகளையும் யாக்கோபி

னிடத்தில் கொடுத்தார்கள் (ஆதி. 35:4). ஆபிரகாமின் வேலைக்காரன், அரைச் சேக்கல் எடையுள்ள பொற்காதணியையும், அவள் கைகளுக்குப் பத்து சேக்கல் எடையுள்ள இரண்டு பொன் கடகங்களையும் காப்புகளையும் எடுத்துக் கொடுத்தான் (ஆதி. 24:22). ஏசாயா, யூதாவின் மேலும், எருசலேமின் மேலும் வரப்போகும் தேவனின் நியாயத்தீர்ப்பைப் பற்றி, தீர்க்கதரிசனம் கூறினான். "அந்நாளிலே ஆண்டவர் அவர்களுடைய ஆபரணங்களாகிய சிலம்புகளையும், சுட்டிகளையும், பிறைச் சிந்தாக்குகளையும், ஆரங்களையும், அஸ்தகடங்களையும், தலைமுக்காடுகளையும் நீக்கிப்போடுவார்" (ஏசாயா 3:18,19).

**ii. வெள்ளி நாணயங்கள்** பெண்கள் உயரமான தொப்பியை அணிவர் என்று கண்டோம். அந்தத் தொப்பிகளில் வெள்ளி, தங்க நாணயங்கள் சில வைத்துத் தைக்கப்பட்டிருக்கும். சில சமயங்களில், அவற்றைக் கழுத்திலும் அணிந்து கொள்வார்கள். கணவன் மனைவிக்குக் கொடுத்த பரிசமாகவோ திருமணப்பரிசின் ஒரு பகுதியாகவோ இருக்கலாம். எனவே அது மிகவும் விலைமதிப்புள்ளதாகக் கருதப்படும். லூக்கா 15:8 - இல் சொல்லப்பட்டுள்ள உவமையில், ஒரு பெண் ஒரு வெள்ளிக்காசைத் தொலைத்து விட்டாள். அது அவளுக்கு அவமானமாகும். அதன் காரணமாக



குணக்குறைவுள்ளவளாக அவள் கருதப்படுவாள். எனவேதான், மிகுந்த சிரமப்பட்டு, தேடிக் கண்டுபிடித்தாள். அந்தக்காசு அவளுக்குத் திரும்பக் கிடைக்காதிருந்தால் அவள் அன்பற்றவள், உண்மையற்றவள் என்று அவளுடைய கணவன் அவளைக் குறித்து சந்தேகிக்கக் கூடும். அவள் அந்த வெள்ளிக்காசைக் கண்டுபிடித்தபின், மிகுந்த மகிழ்ச்சியோடு, தன்னுடைய நண்பர்களும் மகிழும்படியாக, அவர்களிடம் தெரிவித்தாள் (லூக். 15:9). ■


## 4. தொழில்கள்

### மேய்ப்பர்

இஸ்ரவேல் மக்கள் மேய்ப்பர்கள். அவர்கள் கானான் தேசத்தில் குடியேறின பின்பு, சிலர் விவசாயிகள் ஆனார்கள். ஆனாலும் தொடர்ந்து, மேய்ப்பர்களாகவும் இருந்தார்கள். யெகோவாவே அவர்களின் மேய்ப்பராய் இருந்தார். மேய்ப்பனைப் போல, யெகோவா தம்முடைய மந்தையை போஷிப்பார் (மேய்ப்பார்). ஆட்டுக் குட்டிகளைத் தமது புயத்தினால் சேர்த்து, தமது மடியிலே சுமந்து, கறவலாடுகளை மெதுவாய் நடத்துவார் (ஏசா. 40:11). "கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார், நான் தாழ்ச்சி அடையேன்" என்று தாவீது சொன்னான் (சங். 23:1). "நானே நல்ல மேய்ப்பன்" என்று இயேசு கிறிஸ்து சொன்னார் (யோவான் 10:11).

### அ. மேய்ப்பர்களுடைய தளவாடங்கள் (ஆயுதங்கள்)

#### i. தடி



அது 30 அங்குலம் நீளமுள்ள ஒரு கட்டை. ஒரு நுனியில் முடிச்சு காணப்படும். மறுநுனி பருமனாக இருக்கும். அதில் கனமாக ஆணிகள் அடிக்கப்பட்டிருக்கும். அது மேய்ப்பனின் இடைக்கச்சையோடு இணைக்கப்பட்டிருக்கும். காட்டு மிருகங்களிலிருந்து, தன்னுடைய ஆடுகளைப் பாதுகாக்க, தாவீது இதை ஒரு ஆயுதமாகப் பயன்படுத்தினான் (1 சாமு. 17:34,35). ஆடுகளைத் தாக்க வந்த மிருகங்களை தடியால் அடித்துத் துரத்துவான்.

#### ii. கோல்

நடக்கப் பயன்படும் ஊன்று கோல் போல அது இருந்தது. சுமார் ஆறு அடி நீளம் இருக்கும். ஒரு நுனியில் ஒரு வளைவு அல்லி போன்ற கொக்கி இருக்கும். ஆடுகளை நடத்திக் கொண்டு போவதற்கும், மரங்களிலிருந்து ஆடுகளுக்கு இலைகளைப் பறித்துப் போடுவதற்கும், மேய்ப்பர்கள் அதைப் பயன்படுத்தினர். "உமது கோலும், உமது தடியும் என்னைத் தேற்றும்" என்று தாவீது பாடினான் (சங். 23:4). ஆடுகளை எதிரிகளிடமிருந்து பாதுகாக்க தடி பயன்பட்டது; ஆடுகளை நடத்திச்



செல்வதற்கும், மேய்ப்பதற்கும் கோல் பயன்பட்டது. எனவே, கோலும், தடியும், உணவைக் கொடுப்பதற்கும் பாதுகாப்பதற்கும் பயன்பட்டன. அவ்விதமாக அவை ஆடு களுக்கு பாதுகாவலாகவும் ஆறுதலாகவும் உதவின.

### iii. மேய்ப்பருக்குரிய அடைப்பப்பை

அது தோலினால் செய்யப்பட்ட ஒரு பை. அதில் மேய்ப்பனுக்குத் தேவையான உணவை யும் ஆடுகளுக்கு மருந்தாகப் பயன்படும் ஒலிவ எண்ணையையும் எடுத்துச் செல்வார்கள். ரொட்டி, பாலாடைக்கட்டி, உலர்த்திய அத்திப் பழங்கள், பொரித்த தானியங்கள் - இவைதான் உணவு. அந்தப் பையைத் தோளில் தொங்க விட்டுக் கொள்வார்கள். தாவீது தடியைத் தன் கையில் எடுத்துக் கொண்டு, ஆற்றிலிருந்து வழவழப்பான கூழாங்கற்களைத் தெரிந்தெடுத்து தன்னுடைய அடைப்பையிலே போட்டுக் கொண்டான்.

### iv. கவண்



இது சுமார் 15 அங்குல நீளமுள்ள இரண்டு கயிறுகளைக் கொண்டது. கற்களைப் போட்டுக் கொள்ளும்படியான, நாற்கர உருவமுடைய ஒரு சிறு தோல் பையோடு கயிறுகள் இணைக்கப்பட்டிருக்கும். அந்தச் சிறு தோல் பையில், கற்கள் போடப்படும். ஒரு கயிற்றை இறுக்கமாகவும், ஒரு கயிற்றை இலேசாகவும் பிடித்துக் கொள்ள வேண்டும். பிறகு, கயிற்றை முறுக்கேற்ற (சுழற்ற) வேண்டும். அப்பொழுது தான் வேகம் கிடைக்கும். அதன்பின், ஒரு கயிற்றை பிடித்துக் கொண்டு, மறு கயிற்றை வேகமாக சுழற்றி வீசவேண்டும். அப்பொழுது பையில் உள்ள கல் மிக வேகமாகப் பாய்ந்து செல்லும். அனுபவம்மிக் கவர், குறி தவறாமல் சரியாக அடிக்கும்படியாகவும் மிக வேகமாகவும் கல்லை வீசுவார்கள்.


தாவீது கவணைக்குறி தவறாமல் சுழற்றி எறிந்து, கோலியாத்தை வீழ்த்தினான். கல் கோலியாத்தின் நெற்றியில் பதிந்து அவன் முகங்குப்புற விழுந்தான் (1 சாமு. 17:49). ஆடுகளைத் தாக்கவரும் மிருகங்களை விரட்டவும், திருடர்களை எதிர்க்கவும் இந்தக் கவண் அந்நாட்களில் பயன்பட்டது.

## v. புல்லாங்குழல்

நாணலால் செய்யப்பட்ட புல்லாங்குழலை மேய்ப்பர்கள் தாங்கள் இளைப்பாறும் நேரத்தில் ஊதி மகிழ்வார்கள். ஆடுகளுக்குத் தண்ணீர் காட்டி நிழலில் அமர்த்திய பின் தாங்களும் உணவருந்துவர். பின்னர் நேரத்தை மகிழ்ச்சியோடு கழிக்க, புல்லாங்குழலை ஊதுவார்கள். அந்த இசையை ஆடுகளும் கேட்டு மகிழும். தாவீது வீணையையும் குழலையும் வாசிக்கிறவனாக இருந்தான். அவன் எழுதிய சங்கீதங்கள் அவனது இசைத் திறமைக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றன.

## vi. வெளி ஆடை

கையினால் நெய்யப்பட்டதும், கனமானதுமான மேய்ப்பனின் வெளி ஆடை அவனுடைய அடிவரை தொங்கக்கூடிய அளவு நீண்டதாக இருக்கும். தலையை மூடிக் கொள்வதற்கான முக்காடும் உடையது. மேய்ப்பன் அந்த ஆடையைக் கொண்டு இரவில் தன் தலையையும் கால்களையும் கைகளையும் மூடிக் கொள்வான். தன் ஆடையையே படுக்கையாகவும், போர்வையாகவும் பயன்படுத்தி, படுத்து உறங்குவான். அந்த ஆடையின் தொங்கலில் நோயுற்ற ஆட்டுக் குட்டிகளை வைத்து சுமந்து செல்வான். கர்த்தரும் தம் மக்களை இப்படியே சுமந்து செல்கிறார். மேய்ப்பனைப் போலத் தமது மந்தையை மேய்ப்பார். ஆட்டுக்குட்டிகளைத் தமது புயத்தினால் சேர்த்து, தமது மடியில் சுமந்து, கறவலாடுகளை மெதுவாய் நடத்துவார் (ஏசா. 40:11).



# ஆ. மேய்ப்பனுக்கும் ஆடுகளுக்கும் உள்ள உறவு

## i. நெருங்கிய உறவு

நல்ல மேய்ப்பன் தன் ஆடுகளைப் பெயர் சொல்லி அழைக்கிறான் (யோவா.10:3). வரியுள்ளவை, புள்ளியுள்ளவை, கறுப்பானவை, பழுப்பு நிறமுடையவை... இவை மேய்ப்பர்கள், தங்கள் ஆடுகளைக் கூப்பிடும் பெயர்களில் சில. மேய்ப்பன் ஆடுகளின் சுபாவத்தை அறிந்திருந்தான் (யோவான் 10:15). நூற்றுக்கணக்கான ஆடுகள் இருந்தாலும்,


தன்னுடைய ஆடுகளைப் பிரிக்க ஒரு மேய்ப்பனால் கூடும். ஆடுகள் அவன் சத்தத்தை அறியும் (யோவான் 10:4).

## ii. வழி நடத்துதல்

ஆடுகளுக்கு வழிகாட்டிக் கொண்டு, மேய்ப்பன் முன்னே நடந்து போகிறான். ஆடுகள் அவனுக்குப் பின் செல்லுகின்றன (யோவா. 10:4). கூட்டத்தை விட்டுவிட்டுத் தனியாகப் போகும் ஆட்டை, கோலினால் இலேசாகத் தட்டுவான். அது வெகு தூரம் தள்ளிப் போய்விட்டால், கவணில் கல்லை வைத்து எறிந்து, அதை மடக்குவான். மற்றவர் களுடைய வயலுக்குள் அவன் தன் ஆடுகளைப் போக விடமாட்டான். அவ்விதமாகவே நல்ல மேய்ப்பர் அவர் நாமத்தினிமித்தம், நீதியின் பாதையில் நம்மை நடத்துகிறார்.

## iii. திருப்பிக் கொண்டு வருதல்

ஆடு திசை அறிவு இல்லாத ஒரு விலங்காகும். நாய்களுக்கு திசை அறிவு அதிகம். வெகு தூரம் கொண்டு போய் விட்டுவிட்டு வந்தாலும், நாய் தன் எஜமான் வீட்டிற்கு வந்து விடும். ஆனால் ஆடு அப்படி அல்ல. நாமெல்லாரும் ஆடுகளைப் போல வழி தப்பித் திரிந்து, அவனவன் தன் தன் வழியிலே போனோம் (ஏசா. 53:6). மேய்ப்பனைப் போல, தேவன் நம்மைத் தேடுகிறார். ஒரு மேய்ப்பன், சிதறுண்ட தன் ஆடுகளின் நடுவே இருக்கிற நாளில், தன் மந்தையைத் தேடிக் கொண்டிருக்கிறது போல, நான் என் ஆடுகளைத் தேடி, அவைகள் சிதறுண்டு போன எல்லா இடங்களிலுமிருந்து, அவைகளைத் தப்பிவரப் பண்ணுவேன் (எசேக். 34:12).



காணாமல் போய் கண்டுபிடிக்கப்பட்ட ஆட்டின் உவமையில், மேய்ப்பன் அந்த ஒரு ஆட்டைத் தேடி அலைந்து, கண்டு பிடித்துக் கொண்டு வருகிறான் (லூக். 15:4). அவர் என் ஆத்துமாவைத் தேற்றுகிறார், அதாவது தன்னிடம் சேர்க்கிறார் (சங். 23:3).

### iv. பாதுகாப்பும் பராமரிப்பும்

திருடன் திருடவும் கொல்லவும், அழிக்கவுமே வருகிறான் (யோவான் 10:10). தாவீது தன் அனுபவத்தில் இத்தகைய திருடனைக் கண்டிருந்தான். ஒரு சிங்கமும், ஒரு கரடியும் தன் ஆடுகளைத் தாக்கிய போது, தாவீது அவைகளைப் பின்தொடர்ந்து போய், அவைகளி டமிருந்து, ஆட்டை மீட்டுக் கொண்டு வந்தான் (1 சாமு. 17:35). ஆடு களை மேய்ப்பது (பராமரிப்பது) கடினமான வேலை. "பகலிலே வெயிலும், இரவிலே குளிரும் என்னைப் பட்சித்தது. நித்திரை என் கண்களுக்குத் தூரமாயிருந்தது" (ஆதி. 31:40) என்று கூறி யாக்கோபு தான் மேய்ப்பனாயிருந்த அனுபவத்தைப் பற்றிக் கூறுகின்றான்.

### v. ஆடுகளின் பயன்கள்


தேவனுக்குப் பலிசெலுத்தப்படுவதே ஆடுகளின் உன்னதமான பயனாகும். செம்மறி மற்றும் வெள்ளாடுகள் பலி செலுத்தப்பட்டன. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தேவ ஆட்டுக்குட்டியாக வர்ணிக்கப் பட்டுள்ளார். "இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கும் தேவ ஆட்டுக்குட்டி" (யோவான் 1:29). மேலும் ஆடுகளின் இறைச்சி உண வாகப் பயன்பட்டது. பால், பாலாடைக்கட்டி, வெண்ணெய் ஆகியவை அதிலிருந்து கிடைக்கும் பிற உணவுப் பொருட்களாகும். அதன் தோல் பை, உடை போன்றவற்றைத் தைப்பதற்கும், அதன் உரோமம் ஆடை, கூடாரம் செய்வதற்கும், செம்மறி ஆட்டுக்கிடாவின் கொம்பு எக்காள மாகவும் பயன்பட்டன.

## விவசாயம்

இஸ்ரவேல் மக்கள் கானான் தேசத்திற்குப்போய்ச் சேர்ந்த பின், ஒரு நிலையான வாழ்க்கை அமைந்தது. மேய்ப்பர் தொழிலோடு கூட விவசாயத்திலும் அவர்கள் ஈடுபட்டார்கள். விவசாயம் என்பது விதைத்தல், வளர்த்தல், அறுவடை செய்தல் ஆகியவற்றைக் கொண்டது. விவசாய முறைகளில் அதிக மாற்றம் இல்லை.


**i. உழுதல்** முன்மாரி வந்தவுடன், அக்டோபர் பின் பகுதி அல்லது நவம்பர் முன் பகுதியில், உழவு நடைபெறும். முன் மழையினால், மண் உழுவதற்கு ஏற்றாற் போல் மெதுவாகும். மழை இல்லாவிட்டால், நிலம் காய்ந்து, கடினமாகிவிடும், நிலத்தை உழ முடியாது. அது உழவர் களுக்குப் பெரிய ஏமாற்றமாக இருக்கும்.

**ii. கலப்பை** இது மரத்தினாலான ஒரு தடி. அது நுகத்துடன் இணைக்கப்பட்டிருக்கும். குறுக்குத் தடியுடன் கட்டப்பட்டிருக்கும். மேல் பகுதியில், கைப்பிடி உண்டு. கீழ்ப்பகுதியில் இரும்பில் செய்த கொழு இருக்கும். உழுபவன் இடது கையால் கலப்பையை அழுத்திப் பிடிப்பான். வலது கையால் மாடுகளை ஓட்டுவான். கலப்பையில் கைவைத்தவன் திரும்பிப் பார்த்தால், எருதுகளுக்கு (மாடுகளுக்கு) தீங்கு ஏற்படும். உழவுசால் நேராக வராது. ஆகவே தான் ஆண்டவராகிய இயேசு, "கலப்பையின் மேல் கையை வைத்துப் பின்னிட்டுத் பார்க்கிற எவனும், தேவனுடைய ராஜ்ஜியத்துக்குத் தகுதியுள்ளவன் அல்ல" என்று கூறினார் (லூக். 9:62). கொழுக்களை பட்டயங்களாக அடிக்குங்காலம் வரும். கர்த்தர் தேசங்களை நியாயந்தீர்க்கும் காலம் அது. உங்கள் மண்வெட்டிகளை (கொழுக்களை) பட்டயங்களாக அடியுங்கள் (யோவேல் 3:10). பட்டயங்கள் மண்வெட்டிகளாக (கொழுக்களாக) அடிக்கப்படும். அது கர்த்தருடைய பொற்காலத்திலே நடக்கும். அவர்கள் தங்கள் பட்டயங்களை மண்வெட்டிகளாக (கொழுக்களாக) அடிப்பார்கள் (ஏசா. 2:4).



**iii. நுகம்** இது கலப்பையின் நுனியில் கட்டப்பட்டுள்ள, உருண்டை வடிவமான தடி. நுகம் என்பது சாதாரணமான பாரம் இழுப்பதைக் குறிக்கும். கீழ்ப்படிதலுள்ள ஊழியர்களுக்கு, கிறிஸ்துவின் நுகம் மெதுவாக இருக்கும். என் நுகம் மெதுவாக இருக்கும் என்று இயேசு சொன்னார் (மத். 11:30). நுகம் உடன் பங்காளரையும் குறிக்கிறது. ஒரு விசுவாசி, அவிசுவாசிகளுடன் கூட்டுறவு வைத்துக் கொள்ளக்கூடாது. அந்நிய நுகத்திலே, அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக (2 கொரி. 6:14). திருமணத்தில் மாத்திரம் அல்ல, வேறு எந்தத் தொழிலிலும் அவிசுவாசியுடன் கூட்டுறவு கூடாது.

**iv. விதைத்தல்** பாலஸ்தீனாவின் முக்கியமான தானியங்கள் கோதுமையும் வாற்கோதுமையுமாகும். விதைக்கிறவன் விதையை ஒரு பையில் போட்டு, தன் தோளில் தொங்கவிட்டுக் கொள்வான், பையில் கையை இட்டு விதைகளை அள்ளி, நடந்து கொண்டே தூவி விதைப்பான். விதையைப் பற்றிய உவமையில், கர்த்தர் நான்கு



விதமான நிலங்களில் விதைப்பது பற்றியும், அவற்றின் வெவ்வேறு விதமான விளைவுகளைப் பற்றியும் கூறுகிறார் (மத். 13:3-8).

**v. பயிர்கள் முதிர்ச்சி அடைதல்** மார்ச் மாத இறுதியிலோ, ஏப்ரல் ஆரம்பத்திலோ வரும் பின்மாரிக்காக, விவசாயிகள் காத்திருப்பர். (வாற்கோதுமையும்) கோதுமையும் முற்றுவதற்கு அது அவசியம். உங்களுக்கு முன் மாரியைக் கொடுத்து, உங்களுக்குப் பின்மாரியையும் வருஷிக்கப் பண்ணுவார் (யோவேல் 2:23).

**vi. அறுவடை செய்தல்** பால் பருவத்திற்குப் பிறகு தானியங்கள் முதிர்ச்சி அடைகின்றன. முற்றுவதற்கு முன்பாக, தானியம் தின்பதற்கு ருசியாக இருக்கும். அப்படிப்பட்ட கதிர்களைக் கொய்து, இரண்டு கைகளாலும் கசக்கித் தின்னலாம். ஆனால் வீட்டுக்குக் கொண்டு போக முடியாது. பிறருடைய விளைச்சலில் பிரவேசித்தால், உன் கையினால் கதிர்களைக் கொய்யலாம். நீ அந்த விளைச்சலில் அரிவாளை இடலாகாது (உபா. 23:25). சீஷர்கள் ஓய்வுநாளில் கதிர்களைக் கொய்து கைகளினால் கசக்கினார்கள். அவ்வாறு சீஷர்கள் தானியத்தைக் கசக்கும் வேலையைச் செய்வதைப் பரிசேயர்கள் குற்றமாகக் கருதிச் சாடினர். ஆனால் சாப்பிடுவதை நியாயப் பிரமாணம் அனுமதிக்கிறது (உபா. 23:25). பஸ்கா பண்டிகையின் இரண்டாம் நாளைக்குப்பின் வந்த முதலாம் ஓய்வு நாளிலே, அவர் பயிர் வழியே நடந்து போகையில், அவருடைய சீஷர்கள் கதிர்களைக் கொய்து, கைகளினால் நிமிட்டித் தின்றார்கள். பரிசேயர்களில் சிலர், அவர்களை நோக்கி, ஓய்வு நாளில் செய்யத்தகாததை (வேலையை) நீங்கள் ஏன் செய்கிறீர்கள் என்று கேள்வி எழுப்பினார்கள்.



**vii. ஏழைகள் கதிர்களைப் பொறுக்குதல்** ஒரு வயலில் அறுவடை முடிந்த பிறகு, அறுக்கப்படாமல் நிற்கும் கதிர்களையும் அறுத்த கதிர்களைக் கட்டும்போது கீழே விழுந்த கதிர்களையும், அந்நியரும், ஏழைகளும் விதவைகளும் பொறுக்கிக் கொள்ளும்படி விட்டுவிட வேண்டும். அவர்களுக்குச் சொந்த வயல் கிடையாது. உங்கள் தேசத்தின் வேளாண்மையை நீங்கள் அறுக்கையில், வயலின் ஓரத்தில் இருக்கிறதை முற்றிலும் அறுக்காமலும், சிந்திக்கிடக்கிற கதிர்களைப் பொறுக்காமலும், எளியவனுக்கும், பரதேசிக்கும் அவைகளை விட்டு விடவேண்டும். நான் உங்கள் தேவனாகிய கர்த்தர் (லேவி. 23:22).

மோவாபிய ஸ்திரீயான ரூத், போவாசின் வயலில் கதிர்களைப் பொறுக்கினாள். ரூத் வயல் வெளியில் அறுக்கிறவர்கள் பிறகே சென்று கதிர்களைப் பொறுக்கினாள். தற்செயலாய் அவளுக்கு நேரிட்ட அந்த வயல் நிலம் எலிமலேக்கின் வம்சத்தானாகிய போவாசுடையதாயிருந்தது (ரூத். 2:3). ஆண்கள் கதிர்களை அறுவடை செய்து, கட்டுகளாகக் கட்டுவார்கள். பெண்கள் விட்டுப் போனவற்றைப் பொறுக்குவார்கள்.


கோதுமை மணிகள் முற்றியவுடன், அவற்றை அறுவடை செய்துவிட வேண்டும். இல்லாவிட்டால், கதிர்குலைகள் வளைந்து தொங்கித் தரையில் படும். தானியம் கெட்டுப் போய் விடும். கோதுமை பயிராகப் பழுக்கும். அறுப்புக் காலம் வருகிறதற்கு இன்னும் நாலு மாதம் செல்லும் என்று நீங்கள் சொல்லுகிறதில்லையா? இதோ, வயல் நிலங்கள் இப்பொழுதே அறுப்புக்கு விளைந்திருக்கிறதென்று உங்கள் கண்களை ஏறெடுத்துப் பாருங்கள் என்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் (யோவான் 4:35). சரியான பருவத்தில் அறுவடை செய்யாவிட்டால், தானியம் வீணாய்ப் போகும். கீழை நாடுகளில் செய்வது போலவே, கதிர்களை ஒரு கையால் பிடித்துக் கொண்டு, மறு கையால் சிற்றரிவாளால் அறுவடை செய்வார்கள். அறுவடை செய்த கதிர்களைக் கையால் சேகரித்து, அரிக்கட்டுகளாகக் கட்டுவார்கள். கதிர்க்கட்டுகளைத் தலையில் சுமந்தோ, கழுதை அல்லது ஒட்டகங்கள் மீது வைத்தோ போரடிக்கும் களத்துக்குக் கொண்டு செல்வார்கள்.

**viii. போரடிக்கும் களம்** அது சுமார் 30 முதல் 50 அடி விட்டம் கொண்ட, வட்ட வடிவமான இடமாக இருக்கும். அதை நன்றாகச் சமப்படுத்தி உறுதியாக்குவார்கள். பின்பு சாணம் கலந்த தண்ணீரை ஊற்றி, மட்டப்படுத்தி, மண்ணும், தானியமும் கலந்துவிடாதபடிச்

செய்வார்கள். சில சமயம், சமதளமான பாறையைக் களமாகப் பயன் படுத்துவார்கள். அர்வனாவின் களத்தை, தாவீது விலைக்கு வாங்கி, கர்த்தருக்கு ஒரு பலிபீடம் கட்டினான் (2 சாமு. 24:18- 25).

சாலொமோன் அந்த இடத்திலேதான் தேவலாலயத்தைக் கட்டினான். ஆபிரகாம் தன் மகன் ஈசாக்கைப் பலியிட, பலிபீடம் கட்டிய இடமும் அதுவே. இந்தப் பாறை எருசலேமில் இருக்கிறது. அது எருசலேமின் குடை அல்லது மண்டபம் என்றழைக்கப்படுகிறது. அவ்விடத்தில் தற்போது ஓமர் என்னும் இஸ்லாமியத் தலைவரின் நினைவாகக் கட்டப்பட்ட மசூதி இருக்கிறது. மீண்டும் அங்கே முன்னுரைக்கப்பட்ட வண்ணம் தேவலாயம் கட்டப்பட்டு தேவராதனையும் பலி செலுத்தலும் நடைபெறும்.

**ix. போரடித்தல்** கதிர்களிலிருந்து தானியத்தைப் பிரிக்க மரத் தடிகளால் அடிப்பார்கள். கிதியோன், கோதுமையை ஆலைக்குச் சமீபமாய் போரடித்தான் (நியா. 6:11). ரூத் தான் பொறுக்கின கதிரைத் தட்டி எடுத்தாள் (ரூத் 2:17). கதிர்களைப் போரடிக்க, மாடுகளைப் பயன் படுத்துவார்கள். மாடுகளை இணைத்து, சுற்றிச் சுற்றி வரும்படி ஓட்டுவார்கள். அப்பொழுது அவைகளின் கால் குளம்புகளில் மிதிபட்டு, தானியங்கள் பிரிந்து வெளியே வரும். அந்த மாடுகளை, கதிரைத் தின்னவும் விடுவார்கள் (உபா. 25:4). இதைப் பயன்படுத்தி, வேலையாள் கூலிக்குப் பாத்திரனாயிருக்கிறான் என்பதை பவுல் விளக்குகிறார் (1 கொரி. 9:9; 1 தீமோ. 5:18).



சில சமயம் போரடிக்க அதற்கான கருவியையும் பயன்படுத்துவார்கள். ஒரு மரப்பலகையில் கூரான உலோக ஆணிகள் இருக்கும். அதைக் கதிர்களின் மேல் வைத்து, மாடுகளால் இழுக்கச் செய்வார்கள். ஆணிகள் பொருந்திய பலகையின் அழுத்தத்தால் கதிர்களிலிருந்து தானியம் பிரிந்துவரும்.

**x. தூற்றுதல் (சுத்தம் செய்தல்)** போரடிக்கப்பட்ட தானியத்தை, மேலே தூக்கி வீசும்போது, காற்றில் பதர் பறந்து போய்விடும். போவாஸ் இன்றிரவு வாற்கோதுமையைத் தூற்றுவான் (ரூத் 3:2).



துன்மார்க்கரோ அப்படியிராமல், காற்றுப் பறக்கடிக்கும் பதரைப்போல் இருக்கிறார்கள் (சங். 1:4). பதரையோ அவியாத அக்கினியால் சுட் டெரிப்பார்கள் (மத். 3:12). இங்கு பதர் இரட்சிக்கப்படாத பாவிகளைக் குறிக்கிறது. சல்லடையை வைத்து, கையால் சலிப்பதும் உண்டு. இதனால், சிறு கற்களும் மற்ற கசடுகளும் பிரிக்கப்படும். பேதுருவுக்கு ஒரு அதிர்ச்சியைக் கொடுப்பதற்காக கோதுமையைச் சுளகினால் புடைக்கிறது போல, சாத்தான் புடைக்க விரும்பினான் (லூக். 22:31).


**xi சேர்த்து வைத்தல் (சேமித்தல்)** தானியங்களை மண்பானைகள் அல்லது தகர பீப்பாய்களில் சேமித்து வைப்பார்கள். கர்த்தர் களஞ்சியங்களில் ஆசிர்வாதத்தைக் கட்டளையிடுவார் (உபா. 28:8). தரையில் வட்ட வடிவமாகக் குழிகளைத் தோண்டி, வாய்ப் பகுதியை வைக்கோலால் மூடுவார்கள். குழியில் தானியத்தை சேமித்து வைப்பார்கள். ■

## அ. திராட்சைத் தோட்டம்

ஏசாயாவின் தீர்க்கதரிசன நூலிலும் (ஏசா. 5:1,2), மத்தேயுவின் நற்செய்தி நூலிலும் (மத். 21:33-46) திராட்சைத் தோட்டத்தைப் பற்றிய உவமையைக் காண்கிறோம்.

**i. நிலத்தைத் தேர்ந்தெடுத்தல்** திராட்சைத் தோட்டத்துக்கு, மலைப் பாங்கான பகுதியைத் தேர்ந்தெடுப்பார்கள். அது மலைச் சரிவுகளாக இருக்க வேண்டும். அப்பொழுது தான் சூரிய ஒளி நன்றாகக் கிடைக்கும். இரவு நேரங்களில் பெய்யும் பனி, மலைச் சரிவுகளை ஈரமாக்கும். தென் பாலஸ்தீனா, எபிரோன், வடக்கு லெபனோன் ஆகிய பகுதிகளில் மலைச் சரிவுகள் அதிகம் உள்ளன. மகா செழிப்பான மேட்டையே தேவன் அவருடைய ஜனங்களாகிய தன் திராட்சைத் தோட்டத்துக்காகத் தேர்ந்தெடுத்தார். (ஏசா. 5:1). ஒரு திராட்சைக் குலையை இரண்டு பேர், ஒரு தடியிலே கட்டித் தூக்கிக்கொண்டு வந்ததன் மூலம், இது நிரூபிக்கப்பட்டது (எண். 13:23).

**ii. ஆயத்தம் செய்தல்** முதலில் தரையைக் கிளறி, அதிலுள்ள கற்களைப் பொறுக்கி எடுப்பார்கள் (ஏசா. 5:2). பெரிய கற்களும் தோண்டி எடுக்கப்பட்டு, மலைச் சரிவுகளிலிருந்து நீக்கப்படும். அவற்றை அவ்வாறே விட்டுவிட்டால், திராட்சைக் கொடியின் வளர்ச்சியை அவை பாதிக்கும். மிதமான மழை பெய்தாலும், ஈரத்தை உறிஞ்சி வைத்துக் கொள்ளும்படியாக, சிறு சிறு கற்களை விட்டுவிடுவார்கள். தரையை ஆழமாகக் கிளறுவதால் தரை மென்மையாக்கப்படும். இவ்வாறாக சாகுபடிக்கு நிலம் ஆயத்தப் படுத்தப்படும்.




**i. வேலியமைத்தல்** அப்புறப் படுத்தப்பட்ட பெரிய கற்களை வேலியமைக்கப் பயன்படுத்துவார்கள். தோட்டத்தைச் சுற்றிலும் கற்களை அடுக்கி மண்ணினால் பூசி, சூரிய ஒளியில் காயவிடுவார்கள். இதனை, ஒரு

திராட்சைத் தோட்டக்காரன், திராட்சைத் தோட்டத்தை நாட்டி அதற்குச் சுற்றி வேலியடைத்தான் (மத். 21:33) என எழுதியிருக்கக் காண்கிறோம். திருடர்களிமிருந்தும், நரிகளிடமிருந்தும், திராட்சைத் தோட்டத்தைக் கெடுக்கிற சிறு நரிகளைப் பிடியுங்கள் (உன். 2:15). இது வேலியின் பயனை விளக்குகிறது. இஸ்ரவேல் மக்கள் கீழ்ப்படியாதபோது, பாதுகாவலான வேலியை எடுத்துப்போடுவேன் என்று தேவன் கூறினார் (ஏசா. 5:5).

**iv. காவல் காக்கும் மேடை** திராட்சைத் தோட்டத்தைக் காவல் செய்வதற்காக மரக்கிளைகளாலும், இலைகளாலும், அதிக உயரத்தில் செய்யப்பட்ட அக்கோபுரம், மேடைக் காவலாளி தங்குமிடமாகப் பயன்படும். அதின் நடுவில் அவர் ஒரு கோபுரத்தைக் கட்டினார் (ஏசா. 5:2) என்பதைக் காண்க.

**v. நறுக்கி, சுத்தம் செய்தல்** நான் மெய்யான திராட்சைச் செடி. என் பிதா தோட்டக்காரர். என்னில் கனி கொடாதிருக்கிற கொடி எதுவோ, அதை அவர் அறுத்துப் போடுகிறார். கனி கொடுக்கிற கொடி எதுவோ, அது அதிக கனிகளைக் கொடுக்கும்படி, அதைச் சுத்தம் பண்ணுகிறார் (யோவா. 15:1,2). மேலே உள்ள, உறுதியற்ற கிளைகளை அறுத்து விடுவார்கள். அப்படிச் செய்வதால் ஆரோக்கியமான கிளைகளுக்குள் சாறு பாய்ந்தோடி, அதிகக் கனிகளைக் கொடுக்கும்.

**vi. திராட்சை ஆலை** அதில் ஒரு ஆலையையும் உண்டு பண்ணினார் (ஏசா. 5:2). அது ஒரு கற்பாறையிலிருந்து குடைந்து உருவாக்கப்பட்டது. அடியில் ஒரு குழாய் இருக்கும். அறுவடை செய்யப்பட்ட திராட்சைப் பழங்களை இந்த ஆலையின் தட்டையான, வட்டமான மேற்புறத்தில் போட்டு, அதை ஆண்களும், பெண்களும் காலால் நன்றாக மிதிப்பார்கள். திராட்சைச்சாறு வடிந்து, கீழே சேகரிக்கப்படும். குழாயைத் திறந்து, பின்தோல் பைகளில் திராட்சைச் சாற்றை சேர்த்து வைப்பார்கள்.



இயேசு கிறிஸ்துவால் நியாயந்தீர்க்கப்படும் தேசங்கள் திராட்சை ஆலையின் உவமையால் விளக்கப்படுகிறது. நான் ஒருவனாய் ஆலையை மிதித்தேன். ஜனங்களில் ஒருவனும் என்னோடிருந்த

தில்லை. நான் என் கோபத்திலே அவர்களை மிதித்து, என் உக்கிரத்திலே அவர்களை நசுக்கிப்போட்டேன். அதினால் அவர்கள் இரத்தம் என் வஸ்திரங்களின் மேல் தெறித்தது, என் உடுப்பையெல்லாம் கறைபடுத்திக் கொண்டேன் (ஏசா. 63:3). வல்லமையுள்ள தேவனின் கடும் உக்கிரத்தையும் அது காட்டுகிறது. புற ஜாதிகளை வெட்டும்படிக்கு, அவருடைய வாயிலிருந்து கூர்மையான பட்டயம் புறப்படுகிறது. இருப்புக் கோலால் அவர்களை அரசாளுவார். அவர் சர்வ வல்லமையுள்ள தேவனுடைய உக்கிர கோபமாகிய மதுவுள்ள ஆலையை மிதிக்கிறார் (வெளி. 19:15).

## ஆ. ஒலிவ மரங்கள்

பாலஸ்தீனம், ஒலிவ மரங்கள் நிறைந்த தேசம் என்று அழைக்கப்படுகிறது. அது கோதுமையும், வாற்கோதுமையும், திராட்சைச் செடிகளும், அத்தி மரங்களும், மாதளஞ் செடிகளுமுள்ள தேசம். அது ஒலிவ மரங்களும், எண்ணெயும் தேனுமுள்ள தேசம் (உபா. 8:8). ஒலிவ மரம், நீண்ட ஆயுளையும் கனி கொடுக்கும் தன்மையையும் குறிக்கிறது. உன் மனைவி வீட்டோரங்களில் கனிதரும் திராட்சைக் கொடியைப் போல் இருப்பாள். உன் பிள்ளைகள் உன் பந்தியைச் சுற்றிலும் ஒலிவ மரக் கன்றுகளைப் போல் இருப்பார்கள். கனி தருவதும், நீண்ட காலம் வாழ்வதும் நற்பேறுகளாகும் (சங். 128:3).

**i. ஒட்டுக் கட்டுதல்** விளைச்சலை அதிகப்படுத்துவதற்காக ஒட்டுக் கட்டப்படும். நல்ல பலன் தரும் ஒலிவ மரத்தின் ஒரு கிளை, காட்டு ஒலிவ மரத்துடன் ஒட்டுக்கட்டப்படும். இதிலிருந்து வரும் கிளைகள் அதிக சத்துள்ள ஒலிவப் பழங்களைக் கொடுக்கிறது. காட்டு ஒலிவ மரக்கிளை, நல்ல ஒலிவ மரத்தோடு ஒட்டுக்கட்டப்படுவதில்லை. அதனால் பயனில்லை.

புற ஜாதி மக்கள் இரட்சிக்கப்பட்டு, இஸ்ரவேல் மக்களோடு, தேவனுடைய மக்களாகக் கருதப்பட்ட போது இந்த நிகழ்ச்சி உண்மையாகவே நிறைவேறிற்று. இதனை புறஇன மக்களுக்கு பவுல் அப்போஸ்தலன் நினைவுபடுத்தியுள்ளார். நீங்கள் காட்டொலிவ மரத்திலிருந்து வெட்டப்பட்டு, உங்கள் சுபாவத்திற்கு மாறாக உள்ள நல்ல ஒலிவ மரத்திலே ஒட்ட வைக்கப்பட்டீர்கள் (ரோமர் 11:24).

பழங்கள் நன்றாய்ப் பழுத்த பின், நீண்ட தடிகளால் அடித்து, அந்த விதைகளை நசுக்கி, எண்ணெய் எடுக்கப்படும்.

## இ. ஒலிவ எண்ணெயின் உபயோகங்கள்



**i. வெளிச்சம்** மண் அல்லது உலோகத்தால் செய்யப்பட்ட விளக்குகளை வீடுகள், ஆசாரிப்புக் கூடாரம், ஆலயம் இவற்றில் பயன்படுத்தினர். அந்த விளக்குகளில் ஒலிவ எண்ணெய் பயன்படுத்தப்படும். புத்தியுள்ள கன்னிகள், தங்கள் தீவட்டிகளோடு, எண்ணெயையும் கொண்டு போனார்கள் (மத். 25:4).

**ii. உணவு** உணவுப்பொருட்களைப் பொரிப்பதற்கு ஒலிவ எண்ணெய் பயன்பட்டது.

**iii. வாசனைப் பொருட்கள் (அழகு சாதனப் பொருட்கள்)** ஒலிவ எண்ணெய், தோலை மிருதுவாக்கும். பளபளப்பைத் தரும். இருதயத்தை மகிழ்ச்சியாக்கும் திராட்சைரசத்தையும், முகக் களையை உண்டு பண்ணும் எண்ணெயையும் கொடுக்கும் (சங். 104:15).

**iv. மருந்து** வெட்டுக் காயங்களுக்கும், புண்களுக்கும் ஒலிவ எண்ணெய் மருந்தாகத் தடவப்படும். நல்ல சமாரியன் கிட்ட வந்து, அவனுடைய காயங்களில் எண்ணெயும், திராட்சரசமும் வார்த்து, காயங்களைக் கட்டினான் (லூக். 10:34).

**v. பலி செலுத்துதல்** ஒலிவ எண்ணெய், போஜன பலியின்ஒரு பகுதியாயிருந்தது. ஒருவன் போஜன பலியாகிய காணிக்கையைக் கர்த்தருக்குச் செலுத்த வேண்டுமானால், அவன் காணிக்கை மெல்லிய மாவாயிருப்பதாக. அவன் அதின்மேல் எண்ணெய் வார்த்து ஊற்றுவானாக (லேவி. 2:1).

**vi. அபிஷேகம்** சில குறிப்பிட்ட ஊழியங்களுக்காக இஸ்ரவேல் மக்கள் அந்த நாட்களில் அபிஷேகம் பண்ணப்பட்டார்கள். தீர்க்கதரிசிகள், ஆசாரியர்கள் மற்றும் அரசர்கள் ஆகியவை அவ்விதச் சிறப்பான பதவிகளாகும். அபிஷேகத் தைலத்திலே கொஞ்சம், ஆரோனுடைய சிரசின்மேல் வார்த்து, அவனைப் பரிசுத்தப்படுத்தும்படி,

அபிஷேகம் பண்ணப்பட்டார்கள் (லேவி. 8:12). அவர்களை அபிஷேகம் செய்து, பிரதிஷ்டைபண்ணி, பரிசுத்தப்படுத்துவாயாக (யாத். 28:41). எலிசா தீர்க்கதரிசியை அபிஷேகம்பண்ணும்படி, எலியாவுக்குச் சொல்லப்பட்டது. ஆபேல்மேகொலா ஊரானான சாப்பாத்தின் ஊரானாகிய எலிசாவை உன் ஸ்தானத்திலே தீர்க்கதரிசியாக அபிஷேகம் பண்ணு (1 இராஜா. 19:16).

அங்கே ஆசாரியனான சாதோக்கும், தீர்க்கதரிசியாகிய நாத்தானும், அவனை (சாலொமோனை) இஸ்ரவேலின் மேல் ராஜாவாக அபிஷேகம் பண்ணக்கடவர்கள் (1 இராஜா. 1:34) என்ற கட்டளையைப் பெற்றனர்.

## ஈ. அத்தி மரங்கள்


அத்தி மரம், இஸ்ரவேல் நாட்டின் தேசியச் சின்னமாகும். அத்தி மரத்தினால் ஒரு உவமையைக் கற்றுக் கொள்ளுங்கள், அதிலே இளங்கிளை தோன்றி, துளிர்விடும்போது, வசந்த காலம் சமீபமாயிற்று என்று அறிவீர்கள் (மத். 24:32). என்ன காலம் என்பதை அறிய துளிர் விடும் அத்திமரம் மக்களுக்கு உதவியது.

**i. அத்திமரத்தைச் சபிக்கக் காரணம்** சாதாரணமாக அத்தி மரம், இரண்டு விதமான பழங்களைக் கொடுக்கும். ஆரம்பத்திலே பழுக்கும் பழத்திற்கு பாக்கூர் என்று பெயர். இலைகள் தோன்றும், மார்ச்சு மாத்தில் பாக்கூரும் தோன்றும். சரியான பருவத்தில் தோன்றும் அத்திப் பழத்திற்கு கிரிமாஸ் என்று பெயர். இது பிந்தி வரும். அதன் பிறகு இலைகள் உதிர்ந்து விடும். எனவே, அத்திமரத்தில் இலைகளும், பழங்களும் ஒரே சமயத்தில் தோன்றும். ஒரே சமயத்தில் மறையும். "மறு நாளிலே அவர்கள் பெத்தானியாவிலிருந்து புறப்பட்டு வருகையில், அவருக்குப் பசியுண்டாயிற்று. அப்பொழுது இலைகளுள்ள ஒரு அத்தி மரத்தைத் தூரத்திலே கண்டு, அதில் ஏதாகிலும் அகப்படுமோ என்று பார்க்க வந்தார். அத்திப் பழக்காலமாயிராதபடியால், வேறொன்றையும் காணவில்லை" (மாற். 11:12,13).

அது கனி கொடுக்கும் காலமல்ல (கிரிமாஸ்). எனவே அதில் பழங்கள் இல்லை. ஆனால் அதில் இலைகள் இருந்தபடியால், பருவ ஆரம்பத்தில் தோன்றும் கனிகள் (பாக்கூர்) இருந்திருக்க வேண்டும். இலைகள் நிறைந்த மரம், பார்வைக்குக் கனிகள் உள்ளதுபோலத் தோன்றிற்று. கனிகள் அற்ற மரம் பரிசேயருக்கு ஒப்பாயிருக்கிறது.

அவர்கள் மாய்மாலக்காரராய் இருந்தார்கள். வாக்கிலே உண்மை யில்லை. வெளித்தோற்றமே காணப்பட்டது. உள்ளான பரிசுத்தம் இல்லை. ஆண்டவர் மாய்மாலத்தை வெறுக்கிறார். எனவே, அவர் அந்த அத்தி மரத்தைச் சபித்தார்.

## உ. அத்திப் பழத்தின் பயன்கள்



**i. உணவு** அபிகாயில், தாவீதுக்கும் அவனுடைய ஆட் களுக்கும் வற்றலான இருநூறு அத்திப்பழ அடைகளைக் கொண்டு வந்தாள் (1 சாமு. 25:18).

**ii. மருந்து** எசேக்கியா பிளவை நோயினால் பாதிக்கப்பட்டு மரணத் தறுவாயில் இருந்தான். அவனைக் காண வந்த ஏசாயா அந்த மன்னனுக்கு அத்திப்பழ அடையினால் பிளவையின் மீது பற்றுப் போட்டதினால் அவன் பிழைத்தான் (2 இராஜா. 20:7).

**iii. செல்வச் செழிப்பும், சமாதானமும்** சாலொமோன் ராஜாவின் நாட்களில் இஸ்ரவேல் நாட்டில் செல்வச் செழிப்பும், சமாதானமும் பெருகியிருந்தன. அந்நாட்களில் தாண் தொடங்கிப் பெயர்செபா மட்டும் (இமயம் முதல் குமரி வரை என்று நம் நாட்டில் கூறுவது போல்), யூதாவும் இஸ்ரவேலும் அவரவர் தங்கள் தங்கள் திராட்சைச் செடியின் நிழலிலும், தங்கள் தங்கள் அத்தி மரத்தின் நிழலிலும் சுகமாய்க் குடியிருந்தார்கள் (1 இராஜா. 4:25). கர்த்தரின் பொற் காலத்திலும் அப்படியே இருக்கும். அவனவன் தன் தன் திராட்சைச் செடியின் நிழலிலும், தன்தன் அத்திமரத்தின் நிழலிலும், பயப்படுத்து வாரில்லா மல் உட்காருவான். சேனைகளுடைய கர்த்தரின் வாய் இதைச் சொல்லிற்று (மீகா. 4:4). ■

**பிற தொழில்கள்**

## அ. குயவன்

வீட்டில் பயன்படுத்தப்படும் பாத்திரங்கள் அனைத்தும் களிமண்ணால் செய்யப்பட்டவை. குயவன் திறமையாக அவைகளைச் செய்தான். சமையலுக்குப் பயன்படுத்தப்படும் பாத்திரங்கள் பளபளப்பாக்கப்பட்டன. மண்ணைக் காலால் மிதித்து, பாத்திரங்கள் செய்வதற்கு ஏற்ற களிமண்ணாக்கப்படும். அவன் வ்ந்து, அதிபதிகளைச் சேற்றைப் போலவும், குயவன் களிமண்ணை மிதிப்பது போலவும் மிதிப்பான் (ஏசா. 41:25). குயவனுடைய சக்கரம் ஒன்று அல்லது இரண்டு சக்கரங்களால் ஆனதாகக் காணப்படும். அந்தச் சக்கரம் அச்சாகிய நடுத்தண்டின் மீது, சுழலும்படியாக இருக்கும். ஒரு குச்சியைக் கொண்டோ, அல்லது தன் காலாலோ, குயவன் அதைச் சுற்றுவான். சக்கரத்தின் மத்தியில், வைக்கப்படும் பதப்படுத்தப்பட்ட களிமண், குயவனின் கையினால் சுழலும் சக்கரத்தில் உருவமைக்கப்படும்.

**i. கர்த்தரின் ராஜரீக சித்தம்** கர்த்தருடைய ராஜரீக சித்தத்தை விளக்குவதற்கு களிமண்ணால் ஒரு குயவன் ஒரு பாண்டத்தை (வனைவது) உவமையாகக் கையாளப்பட்டுள்ளது. தேவன் தம்முடைய ஊழியன், தீர்க்கதரிசி எரேமியாவுக்கு ஒரு குறிப்பிட்ட பாடத்தைக் கற்றுக் கொடுத்தார். தேவன் அவனை ஒரு குயவனிடம் போய், அவனை எப்படி ஒரு பாண்டத்தைச் செய்கிறான் என்பதைக் கவனிக்கச் சொன்னார். அப்படியே நான் குயவன் வீட்டிற்குப் போனேன். இதோ, அவன் சக்கரத்திலே வனைந்து (உரு வாக்கிக்) கொண்டிருந்தான். குயவன் வனைந்து கொண்டிருந்த மண்பாண்டம் அவன் கையிலே கெட்டுப் போயிற்று. அப்பொழுது அதைத் திருத்தமாய்ச் செய்யும்படிக்கு, தன் பார்வைக்குச் சரியாய்க் கண்டபடி, குயவன் அதைத் திரும்ப வேறே பாண்டமாக வனைந்தான் (எரே.



18:3,4). களிமண்ணில் இருந்த ஏதோ ஒரு கல் அல்லது ஒரு குறைபாட்டினால், பாண் டம் கெட்டுப்போயிற்று. அந்தக் களி மண்ணை அவன் எறிந்து விடவில்லை. ஆனால் குயவன் மறுபடியும் அதைச் செய்தான். நம்முடைய கர்த்தர், பாவத்தினால் கெட்டுப்போன, நம்முடைய வாழ்க்கையைப் புதிதாக்கும் படியாய் விரும்புகிறார். அவர் எது நல்லது என்று தமக்குத் தோன்று கிறதோ, அதன்படி தம்முடைய ராஜரீகச் சித்தத்தின்படி பாண்டங்களை உருவாக்குகிறார். அப்படியானால், மனுஷனே, தேவனோடு எதிர்த்துத் தர்க்கிக்கிற நீ யார்? உருவாக்கப்பட்ட வஸ்து உருவாக்கினவனை நோக்கி, நீ என்னை ஏன் இப்படி உண்டாக்கினாய் என்று சொல்லலாமா? மிதியிட்ட ஒரே களிமண்ணினாலே குயவன் ஒரு பாத்திரத்தைக் கனமான பயனுக்கும், ஒரு பாத்திரதைக் கனவீனமான பயனுக்கும் பண்ணுகிற தற்கு மண்ணின் மேல் அவனுக்கு அதிகாரம் இல்லையோ? கிறிஸ்து வுக்குள் புதிய படைப்புகளாக மாற்ற, தேவனால் முடியும். இப்படி யிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால், புதுச் சிருஷ்டியாய் இருக்கிறான், பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின (2 கொரி. 5:17).

**ii. தெய்வீக நியாயத் தீர்ப்பு** ஒரு இரும்புக் கோலால், மண் பானைகளை உடைத்து நொறுக்குவதற்கு தேவனின் நியாயத்தீர்ப்பு ஒப்பிடப்பட்டுள்ளது. இருப்புக் கோலால் அவர்களை நொறுக்கி, குயக் கலத்தைப்போல் அவர்களை உடைத்துப்போடுவீர் (சங். 2:9). ஒரு தேசத்தின் நியாயத்தீர்ப்பு இப்படியாக விளக்கப்பட்டுள்ளது. அவன் இருப்புக் கோலால் அவர்களை ஆளுவான். அவர்கள் மண்பாண்டங் களைப் போல் நொறுக்கப்படுவார்கள் (வெளி. 2:27).

**iii. ஒரு கலசம் குளிர்ந்த தண்ணீர்** புதிதாக வனையப்பட்ட, பளபளப்பேற்றப்படாத, மண்பாண்டங்களில் நுண்ணிய துவாரங்கள் வழியாக, நீர் கசியும். இப்படிக் கசிந்த நீர், நீராவியாகப் போய் விடும். இப்படி ஆவியாவதற்குத் தேவையான வெப்பத்தை, மண்பாண்டத்தில் உள்ள நீரிலிருந்து, அது எடுத்துக்கொள்ளுகிறது. ஆகவே, மண்பாண் டத்தில் உள்ள நீர் குளிர்ச்சியாகி விடுகிறது. சீஷன் என்னும் நாமத் தினிமித்தம் இந்தச் சிறியரில் ஒருவனுக்கு ஒரு கலசம் தண்ணீர் மாத்திரம் குடிக்கக் கொடுக்கிறவனும் தன் பலனை அடையாமற் போகான் என்று மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் (மத். 10:42).

## ஆ. மீனவர்

மத்தியதரைக் கடற்கரை ஓரங்களிலும், கலிலேயக் கடலைச் சுற்றியும் வாழ்ந்தவர்களுக்கு, மீன் பிடிப்பது ஒரு முக்கிய தொழிலாக இருந்தது. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் சீடர்களில் சிலர் மீனவர்களாக இருந்தனர். மீன் பிடிப்பதற்குப் பலவிதமான வழிகளைக் கையாண்டனர். தூண்டில் போடுவது ஒரு முறை. மேலும் வட்டவடிவமான வலைகளையும், இழுவலைகளையும் பயன்படுத்தினார்கள். கட்டிடம் கட்டுதல், தோல் பதனிடுதல், வாணிபம் போன்ற தொழில்களையும் அம்மக்கள் செய்து வந்தார்கள்.




## இ. தச்சன்

தச்சுத்தொழில் மக்களின் முக்கிய தொழில்களில் ஒன்றாக இருந்தது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தச்சன் எனக் குறிப்பிடப் படுள்ளார். இவன் தச்சன் அல்லவோ? மரியாளுடைய குமாரன் அல்லவோ? யாக்கோபு, யோசேப்பு, யூதா, சீமோன் என்பவர்களுக்குச் சகோதரன் அல்லவோ? (மாற். 6:3). அவர்கள் கலப்பைகள், நுகத்தடி, கதவு, ஜன்னல், நாற்காலி முதலியவற்றைச் செய்தார்கள். நுட்பமில்லாத பழமையான கருவிகளைப் பயன்படுத்தினார்கள். என்றாலும் அவை மிக அழகான பொருட்களாக இருந்தன. பலகணிக்குத் தேவையான சித்திர வேலைப்பாடுகள் மிக்க கிராதிகளையும் செய்தனர்.

## ஈ. ஆயக்காரர்கள் (வரி வசூலிப்போர்)

யூதர்கள் சுதந்திரத்தைப் பெரிதும் விரும்பினர். புற இனத்தவராகிய ரோமர் தங்களை ஆளுகை செய்வதை அவர்கள் வெறுத்தனர். மேலும், ஆயக்காரர்கள், சட்டப்படி நியமித்த வரிகளைவிட அதிகமாய் வாங்கினார்கள். பணம் வசூலிப்பதில் வன்முறைகளைக் கையாண்டனர். அவர்கள் மக்களிடம் லஞ்சம் வாங்கினார்கள். எனவே அவர்கள் பாவிகளாகக் கருதப்பட்டனர். பரிசேயர்கள், உங்கள் போதகர் ஆயக்காரரோடும் பாவிகளோடும் போஜனம் பண்ணுகிறதென்னவென்று



கேட்டார்கள் (மத். 9:11). வேசிகளைப்போல இவர்களும் மிக கேவலமானவர்களாகக் கருதப்பட்டனர். இயேசு கிறிஸ்து, பிரதான ஆசாரியரிடமும், மூப்பர்களிடமும் ஆயக்காரரும் வேசிகளும் உங்களுக்கு முன்னே தேவனுடைய ராஜ்ஜியத்தில் பிரவேசிக்கிறார்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று சொன்னார் (மத். 21:31).

ஆயக்காரன் என்ற முறையில், மத்தேயு பயணிகளிடம் சுங்க வரியை வசூலித்துக் கொண்டிருந்தான். அவன் ஒரு வேளை சுங்க அதிகாரியாக இருந்திருக்கலாம். அவனுக்கு ஒரு அலுவலகம் இருந்தது. மற்றவர்கள் அவனிடத்தில் பணி செய்தனர். தன்னைப் பின்பற்றி வரும்படி மத்தேயுவிடம் இயேசு கிறிஸ்து கூறினார். “இவைகளுக்குப் பின்பு, அவர் புறப்பட்டு, ஆயத்துறையில் உட்கார்ந்திருந்த லேவி என்னும் பேருடைய ஒரு ஆயக்காரனைக் கண்டு, எனக்குப் பின் சென்று வா என்றார்” (லூக். 5:27). ■

## 5. பண்பாடு

### கல்வி

பழங்கால உலகில், உயர்தரமான கல்வி இருந்தது என்பது, தொல்பொருள் ஆராய்ச்சியிலிருந்து நிரூபணமாகிறது. ஆபிரகாம் காலத்தில், மெசெப்பத்தோமியா நாகரிகத்தில், களிமண்ணால் ஆன எழுத்துப் பட்டைகள் இருந்தன. கணிதம், செயல்முறை வடிவியல், வணிகச் சட்ட ஒழுங்குகள் ஆகியவை பாடங்களாகக் கற்பிக்கப்பட்டன. மோசே எகிப்தியருடைய சகல சாஸ்திரங்களிலும் கற்பிக்கப்பட்டு வாக்கிலும், செய்கையிலும் வல்லவனான் (அப். 7:22).

மெசெப்பத்தோமியா, நாகரிக காலத்திலேயே, எகிப்திய நாகரிகமும் இருந்தது. மக்கள் வாசிக்கவும் எழுதவும் அறிந்திருந்தனர். நிலத்தைத் துல்லியமாக அளப்பதற்கு அவர்கள் வடிவியலைப் பயன்படுத்தினர். ஏனெனில் நிலத்திற்கு நல்ல மதிப்பு இருந்தது. வேதியியல், மருத்துவம் ஆகிய துறைகளிலும் முன்னேற்றம் அடைந்திருந்தனர். உலோகங்களைப் பற்றிய அறிவும் உடையவராயிருந்தனர்.

### அ. கல்வி கற்ற முறைகள்



**i. வீடு** மோசேயின் நியாயப்பிரமாணத்தின்படி வீடே குழந்தையின் முதல் பள்ளிக்கூடமாகும். பெற்றோர்களே ஆசிரியர்கள். இன்று நான் உனக்குக் கட்டளையிடுகிற இந்த வார்த்தைகள் உன் இருதயத்தில் இருக்கக்கடவது. நீ அவைகளை உன் பிள்ளைகளுக்குக் கருத்தாய் போதித்து, நீ உன் வீட்டில் உட்கார்ந்திருக்கிறபோதும், வழியில் நடக்கிறபோதும், படுத்துக்கொள்கிறபோதும், எழுந்திருக்கிறபோதும் அவைகளைக் குறித்துப் பேசு (உபா. 6:6,7).

**ii. ஜெபாலயம்** ஐந்து அல்லது ஆறு வயதுப் பிள்ளைகள் ஜெபாலயத்திற்குக் கல்வி கற்கச் செல்வார்கள். பன்னிரெண்டு வயது வரை, அவர்களுக்குப் பாரம்பரியான நியாயப்பிரமாணங்கள் கற்பிக்கப்பட்டன. பதினைந்து வயதிற்குப் பிறகு, பழைய ஏற்பாட்டின் இறையியல் கல்வி கற்றார்கள். அவர்கள் பழைய ஏற்பாட்டைப் படிப்பதற்குத்தான் முக்கியமாக எபிரெய மொழியைக் கற்றார்கள். கல்வியின் முக்கியத்



துவம் மத போதனையாக இருந்தது (Religious Education).


**iii. தீர்க்கதரிசிகளின் பள்ளிக் கூடம்** தீர்க்கதரிகளுக்கான பள்ளிகளை சாமுவேல் நிறுவினார். மதப் பணிகளைச் செய்யும்படியாக, லேவியர்களுக்குப் பயிற்சி கொடுப்பதே அதன் முக்கிய நோக்கமாகும். சாமுவேல் சவுலிடம் பெலிஸ்தரின் தாணையம் இருக்கிற தேவனுடைய மலைக்குப் போவாயாக. அங்கே நீ பட்டணத்திற்குள் பிரவேசிக்கையில், மேடையிலிருந்து இறங்கிவருகிற தீர்க்கதரிசிகளின் கூட்டத்திற்கு எதிர்ப்படுவாய் என்றான் (1 சாமு. 10:5). அவர்கள் அந்த மலைக்கு வந்தபோது, இதோ, தீர்க்கதரிசிகளின் கூட்டம் அவனுக்கு எதிராக வந்தது (1 சாமு. 10:10). அந்த வாலிபர்கள் கிபியாவிலே சாமுவேலிடம் கற்றார்கள். ராமாவிலே, தீர்க்கதரிசிகளுக்கு மற்றுமோர் பள்ளி இருந்தது (1 சாமு. 19:18). நியாயப்பிரமாணம், இஸ்ரவேலின் சரித்திரம், புனித வரலாறு, வேதத்தை நகல் எடுப்பது ஆகிய காரியங்களில் சாமுவேலின் சீடர்கள் பயிற்சி பெற்றார்கள். பிற்காலத்தில அவர்கள் வேதபாரகர்கள் எனப்பட்டனர்.

**iv. பயிற்சிப் பள்ளிகள்** போதகருக்கான உயர்கல்வி கற்றவர்கள் ரபீ என்றழைக்கப்பட்டனர். அத்தகையோரை உருவாக்கும் பள்ளிகளே இவ்வகைப்பள்ளிகள். கமாலியேலிடம் பவுல் கல்வி கற்றான். நான் எருசலேமிலே கமாலியேலின் பாதத்தருகே வளர்ந்து, முன்னோர்களுடைய வேதப்பிரமானத்தின்படியே திட்டமாய் போதிக்கப்பட்டேன் என்று பவுல் கூறினார் (அப். 22:3). கமாலியேல் கண்டிப்பான பரிசேய ரபீ (போதகர்) ஆவார். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து அவருடைய சீடர்களால் ரபீ என்று அழைக்கப்பட்டதைக் காணுங்கள். கர்த்தராகிய ஆண்டவர் எனக்குக் கல்விமானின் நாவைத் தந்தருளினார். காலைதோறும் என்னை எழுப்புகிறார்; கற்றுக்கொள்கிறவர்களைப் போல, நான் கேட்கும்படி என் செவியைக் கவனிக்கச் செய்கிறார் (ஏசா. 50:4). நமது கர்த்தர் ஞானத்தின் திருவுருவானவர் (நீதி. 8:14). சர்வ ஞானியான இயேசு கிறிஸ்து பிதாவிற்கு செவிகொடுத்து, அவருடைய சித்தத்தை நிறைவேற்றினார்.

**v. ரோமர் பள்ளி** திறன்னு என்பவனுடைய பள்ளியை வாடகைக்கு எடுத்து, அதில் கர்த்தருடைய வார்த்தையை பவுல் போதித்து வந்தார். (அப். 19:9). அது திறன்னுவின் வீட்டின் ஒரு பகுதியாக இருந்திருக் கலாம். பகலிலே அது ஒரு ஆரம்பப்பள்ளியாக இருந்திருக்க வேண்டும். அதை, மாலையிலும், இரவிலும் பிரசங்கிக்கவும், போதிக்கவும் பவுல் பயன்படுத்தினார்.

தங்களுடைய பிள்ளைகளைப் பள்ளிக்குக் கூட்டிக்கொண்டு போக, செல்வந்தர்கள் அடிமைகளை உபயோகப்படுத்தினார்கள். அந்த அடிமைகள் கூட சில சமங்களில் குழந்தைகளுக்குக் கற்பிப்பது உண்டு. அந்த அடிமைகளை நியாயப் பிரமாணத்துக்கு ஒப்பிட்டு, நம்மைக் கிறிஸ்துவாகிய போதகரிடம் கொண்டுவருபவராகப் பவுல் குறிப்பிடுகிறார். இவ்விதமாக, விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப் படுவதற்கு நியாயப்பிரமாணம் நம்மை கிறிஸ்துவினிடத்தில் வழி நடத்துகிற உபாத்தியாக இருந்தது (கலா. 3:24).

## ஆ. இசைக் கருவிகள்



ஆடுகளின் மகிழ்ச்சிக்காக வும் தங்களுக்குப் பொழுது போக் குக்காகவும், மேய்ப்பர்கள் புல் லாங்குழல் வாசிப்பார்கள் என்று ஏற்கனவே பார்த்தோம். மக்கள் Harp (நரம்பு, மெல்லிய கம்பிகள் உள்ள இசைக் கருவி), Pipe (குழல்), Timbrels (கஞ்சிரா போன்ற இசைக் கருவி) அல்லது கைதாளம் (தம்புரு) மற்றும் எக்காளங்களைப் பயன்படுத்தினார்கள். பழைய ஏற்பாட்டு ஆலயத் தொழுகைக்காகத்தான் பெரும்பாலும் இசைக்கருவிகளைப் பயன் படுத்தினர். ■

## திருமணம்

இஸ்ரவேல் மக்களின் வாழ்க்கையில், விவாகம் ஒரு இன்றியமையாத நிகழ்ச்சியாகவும், புனிதமானதாகவும் கருதப்பட்டது.

**i. திருமணம் ஒரு சாயல்** அது யேகோவாவிற்கும், இஸ்ரவேல் மக்களுக்கும் உள்ள உறவின் அடையாளமாக இருந்தது. நித்திய விவாகத்திற்கென்று உன்னை (இஸ்ரவேலை), எனக்கு (யேகோவா) நியமித்துக் கொள்ளுவேன். நீதியும் நியாயமும் கிருபையும் உருக்க இரக்கமுமாய் உன்னை எனக்கு நியமித்துக் கொள்ளுவேன் (ஓசி. 2:19). கிறிஸ்துவுக்கும், அவருடைய சபைக்குமுள்ள உறவுக்கும் அது அடையாளமாயிருக்கிறது. கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறது போல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான். அவரே சரீரத்துக்கும் இரட்சகராயிருக்கிறார் (எபே. 5:23).

கீழை நாடுகளில், மணமகளை மணமகனின் பெற்றோர்களே தெரிவு செய்கின்றனர். பெற்றோர் மட்டுமல்ல, மணமகனின் முழுக் குடும்பமும், மணமகளைத் தேர்வு செய்வதில் பங்கெடுக்கிறார்கள். ஏனென்றால், விவாகத்திற்குப் பிறகு மணமகள், மணமகனின் குடும்பத்தில் ஒருவராகி விடுகிறார்.

**ii. விவாகத்திற்குமுன் பேச்சு வார்த்தை நடத்துதல்** மணமகனின் தந்தை, ஒரு தரகரிடம் தொடர்பு கொண்டு, தன் மகனுக்கு எப்படிப்பட்ட பெண் வேண்டுமென்று தெரிவிக்கிறார். பின், அந்தத் தரகர் பெண் வீட்டாரையும், உறவினர்களையும் சந்திக்கிறார். அவர்கள் ஒத்துக்கொண்டால், இரண்டு குடும்பங்களும் மேற்கொண்டு பேச்சு வார்த்தைக்குக் கூடிவருகிறார்கள். வந்த காரியம் முடியாவிட்டால் தரகர்கள் சாப்பிட மாட்டார்கள். ஆபிரகாமின் மகன் ஈசாக்குக்குப் பெண் பார்க்க ஆபிரகாமின் வேலைக்காரன் போனான். அவனுக்கு முன் உணவு வைக்கப்பட்டது. அவனோ, நான் வந்த காரியத்தைச் சொல்லுமுன்னே புசிக்கமாட்டேன் என்றான் (ஆதி. 24:33).

**iii. நிச்சயதார்த்தம்** இது ஒரு உடன்படிக்கை. விவாகத்தைப் போலவே இதுவும் ஒரு உடன்படிக்கை தான். இந்த வைபவத்திற்கு, இரு

வீட்டாரும் வருவார்கள். வந்த மற்றவர்கள் சாட்சிகள். மணமகன் ஒரு மோதிரத்தையோ அல்லது விலையுயர்ந்த ஒரு பொருளையோ, மணமகளுக்குக் கொடுப்பான்.

விவாகத்திற்கு வெகு முன்பாகவே நிச்சயதார்த்தம் நடைபெறும். சில சமயங்களில் விவாகத்திற்கு ஒரு வருடத்துக்கு முன்பாகக்கூட, இது நடக்கும். அவருடைய தாயாராகிய மரியாள், யோசேப்புக்கு நிச்சயிக்கப்பட்டிருக்கையில், அவர்கள் கூடிவருமுன்னே, அவள் பரிசுத்த ஆவியினாலே கர்ப்பவதியானாள் என்று காணப்பட்டது (மத். 1:18).

**iv. மணமகன்** மணமகன் ஒரு விவசாயியாக இருந்தாலும், விவாகத்தன்று ஒரு இளவரசனைப் போல் ஆடையலங்காரம் செய்யப்படுவான். மணவாளன் ஆபரணங்களினால், தன்னைச் சிங்காரித்துக் கொள்ளுகிறதற்கு ஒப்பாக (ஏசா. 61:10). அவனுடைய நண்பர்கள் அவனுடன் வருவார்கள்.

**v. மணப்பெண்ணை அலங்கரித்தல்** மணப்பெண்ணை அதிக செலவு செய்து ஆடம்பரமாக அலங்கரிப்பார்கள். அனைத்தும் அவளுக்கு அணிவிக்கப்டும். குடும்பம் ஏழையாக இருந்தால் மணப்பெண்ணை அலங்கரிக்க நண்பர்களிடமிருந்து நகைகளைக் கடனாக வாங்குவார்கள். மணமகள் தன்னுடைய விவாக சேலையை, பல ஆண்டுகளுக்கு ஒரு பொக்கிஷம் போல வைத்திருப்பாள். ஒரு பெண் தன் ஆபரணத்தையும், தன் ஆடைகளையும் மறப்பாளோ? என் ஜனங்களோ எண்ணிமுடியாத நாட்களாய் என்னை மறந்து விட்டார்கள். (எரே. 2:32). யோவானாகிய நான், புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரத்தைத் தேவனிடத்தினின்று பரலோகத்தை விட்டு இறங்கி வரக்கண்டேன். அது தன் புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்ட மண வாட்டியைப் போல ஆபரணங்கள், உடைகள் அணிதிருந்தது (வெளி. 21:2).




**vi. திருமண ஊர்வலம்** முதலில் மணப்பெண் ஊர்வலமாக வருவாள். தன்னுடைய குடும்பத்தாரால் அன்பளிப்பாகக் கொடுக்கப் பட்ட வீட்டுச் சாமான்கள் ஊர்வலமாக எடுத்து வரப்படும். அத்தோடு நண்பர்க்ள் கொடுத்த பரிசுப் பொருட்களும் கணவன் வீட்டார் கொடுத்த பரிசத்தோடு வந்த மற்ற பொருட்களும் வரும். குடும்பத்தினர்களும், நண்பர்களும், மணப்பெண்ணைத் தொடர்ந்து வருவார்கள். அப்பொழுது மணமகன் வரமாட்டான்.

அதன் பின்பு, மணமகன் கோலாகலமாக ஊர்வலமாக வருவான். எல்லோருடைய கவனமும் அவன் மேலேயே இருக்கும். இந்த ஊர்வலம் பொதுவாக விளக்குகளோடும், தீப்பந்தகளோடும் இரவில் நடக்கும். ஆண்டவர் கூறிய பத்துக் கன்னிகைகளின் உவமையைக் காண்போம். ஐந்து கன்னிகைகள், தங்கள் தீவட்டிகளுக்கு எண்ணெய் ஆயத்தமாய் வைத்திருந்தார்கள். ஆனால் புத்தியில்லாத மற்ற ஐந்து கன்னிகைகள் தங்களிடம் எண்ணெய் இல்லாததால் அதனை வாங்கப் போன போது மணவாளன் வந்துவிட்டார். ஆயத்தமாயிருந்தவர்கள் அவரோடுகூடக் கலியாண வீட்டுக்குள் பிரவேசித்தார்கள். கதவும் அடைக்கப்பட்டது (மத். 25:10).

திருமண விருந்தைப் பற்றி ஆண்டவர் ஒரு உவமையைச் சொன்னார் (மத். 22:1-14). மணமகன் வீட்டார் சிறப்பான திருமண ஆடையை இலவசமாகக் கொடுப்பார்கள். இந்தச் சிறப்பு ஆடை இல்லா விட்டால், திருமண விருந்துக்கு உள்ளே செல்ல முடியாது. அழைக் கப்பட்டு சரியானபடி வாசல் வழியாக வந்தவர்கள் யாவரும் திருமண உடை அணிந்திருப்பார்கள்.

## கால்களைக் கழுவுதல்

இஃது கிழக்கத்திய நாட்டினரின் வழக்கமாகும். நம் நாட்டில் சிற்றூர்களில் இந்நாட்களிலும் இப்பழக்கம் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. ஆயினும், இன்று கொஞ்சம் கொஞ்சமாக இந்த வழக்கம் மறைந்து வருகிறது. நீர் நிரம்பிய தொட்டி வீட்டின் வாசல் அருகில் வைக்கப் பட்டிருக்கும். அதன் அருகே ஒரு குவளையையும் வைத்திருப்பார்கள். வெளியிலிருந்து வருவோர் வீட்டின் உள்ளே செல்வதற்கு முன்ன தாகத் தங்களுடைய கால்களை நன்றாகக் கழுவி தூய்மைப்படுத்து வார்கள்.



யூதர்களுக்குள்ளான செல்வந்தர்கள் தங்களுடைய வீட்டில் பணி புரிய அடிமைகளை நியமித்திருந்தனர். வீட்டிற்கு விருந்தினர்கள் வருகை புரியும் நேரங்களில் அவர்களுடைய கால்களைக் கழுவிவிடுவது இந்த அடிமைகளின் வேலையாகும். தம்முடைய சீடர்களின் கால்களைக் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து கழுவினபோது தம்மை அடிமையாக வெளிப்படுத்திக் காட்டினார். "தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார்" (பிலி. 2:7). வேதத்தில் தண்ணீர் வசனத்தைக் குறிப்பதாகும். வசனத்தினால் விசுவாசியானவன் தன்னைச் சுத்தம் செய்துகொள்ள வேண்டியதையும் இந்நிகழ்ச்சி குறிக்கிறது. விசுவாசிகள் ஒருவருக்கொருவர் தாழ்மையுடன் நடந்துகொள்ள வேண்டுமென்பதையும் இது குறிக்கிறது. ஆயின் இதனை இன்றைய நாட்களில் சில சபைகள் ஒரு சடங்காகக் கடைப்பிடிப்பதில் எவ்விதப் பயனுமில்லை.

## மரணம்

மரணத்தைப் பற்றி கீழை நாட்டு மக்கள் கொண்டிருந்த மனோபாவமும், நடக்கையும், மேலே நாட்டு மக்களின் மனோபாவமும், நடக்கையும் முற்றிலும் வித்தியாசமானது. ஒரு வீட்டில் மரணம் சம்பவித்தவுடன், அவ்வீட்டார் மிகுந்த சத்தமிட்டு அழுவார்கள். அதன் காரணமாக அவ்விசயம் அண்டை, அயலாருக்குத் தெரியவரும். எகிப்திலே பெரிய அழுகை உண்டாயிற்று. மகா கூக்குரல் எகிப்திலே உண்டாயிற்று. சாவில்லாத ஒரு வீடும் இருந்ததில்லை (யாத். 12:30).

யவீரு ஒரு ஜெப ஆலயத் தலைவனாயிருந்தான். அவனுடைய மகள் இறந்து விட்டாள். இயேசு கிறிஸ்து யவீருவின் வீட்டுக்குள் சென்றார். ஜெப ஆலயத்தலைவனுடைய வீட்டிலே வந்து, சந்தடியையும் மிகவும் அழுது புலம்புகிறவர்களையும் கண்டார் (மாற்கு 5:38). சில சமயம் முதிர்வயதுள்ளவர் மரித்தால், அழுவதற்குக் கூலி கொடுத்து ஆட்களை வரவழைப்பார்கள். மக்கள் மனஸ்தாபப்படு

வதில்லை. அவர்களிடம் தெய்வீகத் துக்கம் ஏற்படாது. சேனைகளின் கர்த்தர் இவ்வாறு கூறுகிறார். நீங்கள் யோசனை பண்ணி, புலம்பற் காரிகளை வரவழைத்து, அதிலே பழகின ஸ்திரீகளைக் (கூலிக்கு மாரடிப்பார்களை) கூப்பிடுங்கள். அவர்கள் சீக்கிரமாய் வந்து, தம் முடைய கண்கள் கண்ணீராய்ச் சொரியத்தக்கதாவும், தம்முடைய இமைகள் தண்ணீராய் ஓடத்ததக்கதாவும் ஒப்பாரி சொல்லக்கடவர்கள் (எரே. 9:17,18).

இறந்தவர்களுக்காக மக்கள் அழும்போது, மிகவும் உணர்ச்சி வசப்படுவார்கள். இயேசு கிறிஸ்து சிலுவையில் மரித்தபோது, ஸ்திரீ கள் துக்கத்தின் அடையாளமாக, மார்பில் அடித்துக் கொண்டார்கள். இந்தக் காட்சியைப் பார்க்கும்படி கூடிவந்திருந்த ஜனங்கள் எல்லாரும் சம்பவித்தவைகளைப் பார்த்த பொழுது, தங்கள் மார்பில் அடித்துக் கொணடு திரும்பிப் போனார்கள் (லூக். 23:48). மேலும், அவர்கள் தங்கள் ஆடைகளைக் கிழித்து, சாக்கை உடுத்திக் கொள்வார்கள். தாவீது அப்னேருக்காகப் புலம்பினான். தாவீது யோவாபையும் அவ னோடிருந்த சகல மக்களையும், நீங்கள் உங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு இரட்டுடுத்தி, அப்னேருக்கு முன்னாக நடந்து, துக்கங் கொண்டாடுங்கள் என்று சொன்னான் (2 சாமு. 3:31).

கர்த்தருடைய மக்களுக்காகத் தீர்க்கதரிசி அழுதான். எரேமியா, "ஆ! என் தலை தண்ணீரும், என் கண்கள் கண்ணீரூற்றுமானால் நலமாயிருக்கும். அப்பொழுது என் ஜனமாகிய குமாரத்தி, கொலை யுண்ணக் கொடுத்தவர்கள் நிமித்தம் நான் இரவும் பகலும் அழுவேன்" (எரே. 9:1). இக்காலங்களில் கர்த்தருடைய ஊழியக்காரர்கள் கர்த்தருடைய ஜனங்களிடம் கதறுகிறார்கள். அம்மக்களுக்காகவும், அவர்களுடைய ஆத்தும நிலைமைக்காகவும் அழுவதில்லை. கண்ணீர்விட்டு அழும் தகப்பன்கள் நமக்கு வேண்டும். தாவீதுக்கு விரோதமாக அநேக காரியங்களைச் செய்த அவனுடைய மகன் அப்சலோமுக்காக தாவீது கதறி அழுதான். அப்பொழுது ராஜா மிகவும் கலங்கி, கெவுனி வாசலின் மேல் வீட்டிற்குள் ஏறிப்போய் அழுதான். அவன் ஏறிப் போகையில், "என் மகனாகிய அப்சலேமே, என் மகனே, என் மகனாகிய அப்சலோமே, நான் உனக்குப் பதிலாகச் செத்தே னானால் நலமாயிருக்கும். அப்சலோமே, என் மகனே, என் மகனே" என்று சொல்லி அழுதான் (2 சாமு. 18:33). சந்தோஷப்படுகிறவர் களுடனே சந்தோஷப்படுங்கள். அழுகிறவர்களுடனே அழுங்கள் (ரோமர் 12:15). என்று சொல்லப்பட்டுள்ளது. லாசரு இறந்தபோது,

மக்கள் அவனுக்காக அழுதார்கள். அவள் அழுகிறதையும், அவனோடேகூட வந்த யூதர்கள் அழுகிறதையும் இயேசு கண்டபோது, ஆவியிலே கலங்கித் துயரமடைந்தார் (யோவான் 11:33). இயேசு கண்ணீர் விட்டார் (யோவான் 11:35). இயேசு கிறிஸ்துவானவர் எப்படி மக்களோடு தன்னை ஈடுபடுத்திக் கொண்டார் என்று பாருங்கள். அழுகிறவர்களோடு அவர் அழுதார். எருசலேமிலுள்ள மக்களுக்காக ஆண்டவர் அழுதார். மேலை நாட்டு மக்கள் சிலர் நினைப்பது போல, அழுவது ஒரு பலவீனம் அல்ல.

**i. அடக்கம் செய்யும் முறை** அவர்கள் இயேசுவின் சரீரத்தை எடுத்து, யூதர்கள் அடக்கம் பண்ணும் முறைமையின்படியே அதைச் சுகந்தவர்க்கங்களுடனே சீலைகளில் சுற்றிக் கட்டினார்கள் (யோவான் 19:40). அவரது சரீரத்தைத் துணிகளாலும், சுகந்தவர்க்கங்களினாலும் கட்டி, பதப்படுத்தினார்கள். லாசரு, கல்லறையை விட்டு வெளியே வந்தபோது சீலைகளினால் கட்டப்பட்டிருந்தான். அப்போது, மரித்தவன் வெளியே வந்தான். அவன் கால்களும் கைகளும் பிரேதச் சீலை களினால் கட்டப்பட்டிருந்தது. அவன் முகமும் சீலையால் சுற்றப்பட்டி ருந்தது. இயேசு அவர்களை நோக்கி, இவனைக் கட்டவிழ்த்து விடும்படி கூறினார் (யோவான் 11:44).


மரணத்திற்குப் பிறகு உடனே அடக்கம் நடைபெறும். வெப்பமான காலநிலையில், சரீரத்தை அதிக நேரம் வைத்திருக்க முடியாது. ஏழை கள் ஊருக்கு வெளியே புதைக்கப்படுவார்கள். பிரேதக்குழி பொதுவாக மண்ணிலே வெட்டப்படும். அவர் ஊரின் வாசலுக்குச் சமீபித்தபோது, மரித்துப்போன ஒருவனை அடக்கம் பண்ணும்படிக் கொண்டு வந்தார் கள். அவன் தன் தாய்க்கு ஒரே மகனாயிருந்தான் (லூக். 7:12). செல்வந் தர்கள், கன்மலையில், தங்களுக்குக் கல்லறைகளை வெட்டிக்கொள் வார்கள். அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பு ஒரு செல்வந்தன் (மத். 27:57). யோசேப்பு இயேசு கிறிஸ்துவின் சரீரத்தை எடுத்து, தூய்மை யான மெல்லிய துப்பட்டியிலே சுற்றி, தான் கன்மலையில் வெட்டி யிருந்த தன்னுடைய புதிய கல்லறையிலே அதை வைத்து, கல்லறை யின் வாசலில் ஒரு பெரிய கல்லைப் புரட்டி வைத்துப் போனான் (மத். 27:59,60).

தீர்க்கதரிசியாகிய சாமுவேல் தன்னுடைய வீட்டிலே அடக்கம் செய்யப்பட்டான். சாமுவேல் மரணமடைந்தான். இஸ்ரவேலர் எல்லா ரும் கூடிவந்து, அவனுக்காகத் துக்கம் கொண்டாடி, ராமாவிலிருக்கிற

அவனுடைய வயலிலே அவனை அடக்கம் பண்ணினார்கள் (1 சாமு. 25:1). தாவீது ராஜா, தாவீதின் நகரத் திலே அடக்கம் பண்ணப்பட்டான். பின்பு தாவீது தன் பிதாக்களோடே நித்திரை அடைந்து, தாவீதின் நகரத்தில் அடக்கம் பண்ணப்பட்டான் (1 இராஜா. 2:10). ஒரு மனிதன் இறந்ததிலிருந்து, அடக்கம் பண்ணப்படும்வரை, மக்கள் உபவாசம் இருப்பார்கள் (சாப்பிட மாட்டார்கள்). அதற்குப்பின் துக்க விருந்து நடக்கும். ■

## தேவாலயமும் ஜெபாலயமும்

### அ. ஆலயம்




பழைய ஏற்பாட்டு ஆசரிப்புக் கூடாரத்தின் அமைப்பின் படியே தேவாலயமும் கட்டப்பட்டது. அதில் மூன்று பிரிவுகள் இருந்தன. அவையாவன: வெளிப்பிரகாரம், பரிசுத்த ஸ்தலம், மகா பரிசுத்த ஸ்தலம். பாலைவனப் பயணத்தின் போது ஆசரிப்புக் கூடாரம் இருந்தது. அவர்கள் பாலஸ்தீன நாட்டைச் சுதந்தரித்துக் கொண்ட பிறகு சில நூற்றாண்டுகளுக்குப் பின்னர், கர்த்தருக்கு ஆலயத்தைக் கட்ட வேண்டும் என்று தாவீது அரசன் விரும்பினான். அவன் தொடர்ந்து போர்செய்த காரணத்தினால் யுத்த மனுஷன் என்று பெயர் பெற்றிருந்தான். ஆகவே அவனது விருப்பத்தின்படி தேவாலயம் கட்டுவதற்குத் தேவன் அவனை அனுமதிக்கவில்லை.

தாவீதின் குமாரனாகிய சாலொமோன் எருசலேம் நகரில் மகிமை பொருந்திய ஆலயத்தைக் கட்டினான். அந்த ஆலயம் பாபிலோனியருடைய படையெடுப்பின்போது அழிக்கப்பட்டுவிட்டது. சிறையிருப்பினின்று விடுதலை பெற்ற யூதர்கள் யெருபாபேல் தலைமையில் எருசலேமிற்குத் திரும்பி வந்தனர். யெருபாபேலின் காலத்தில் புதிய தேவாலயத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. பின்னர் அது கட்டப்பட்டது. எஸ்றா அதனை அழகு படுத்தினான். நெகேமியா எருசலேம் நகர மதிற்சுவரைப் பழுதுபார்த்துக் கட்டினான்.

யூத மக்களைக் மகிழ்விக்கச் செய்யவும், அவர்களுடைய ஆதர வைப் பெறவும் ஏரோது மன்னன் புதிய தேவாலயத்தை விரிவுபடுத்தி மீண்டும் புதுபித்து கட்டினான். அதனை அவன் கட்டிமுடிக்க 46 ஆண்டு கள் ஆயின. அவ்வாலயம் கி. பி. 70 -இல் ரோம படைத்தளபதி தீத்து வினால் முற்றிலும் அழிக்கப்பட்டுவிட்டது. இந்நாள்வரை அது மீண்டும் கட்டப்படவில்லை. எதிர்காலத்தில் மகிமை பொருந்திய வகையில் தேவா லயம் அங்கு கட்டப்படும் என்று எசேக்கியல் முன்னுரைத்துள்ளான்.


## ஆ. ஜெபாலயம்



ஆளுகையும் அதிகாரமும் பெற்ற யூதர்கள் தேவாலயத்தைக் கட்டவில்லை. மாறாக ஜெப ஆலயங்களையே அவர்கள் கட்டினர். ஜெப ஆலயங்களில் பலிபீடம் இடம் பெறவில்லை; அங்கே பலிகளும் செலுத்தப்படவில்லை. தேவனுடைய வார்த்தையைக் கற்றிடவும், ஜெபம் செய்யவும், ஐக்கியம் கொள்ளவும் அந்த ஜெப ஆலயங்கள் பயன்பட்டன. மூப்பர்கள் அவற்றின் நடவடிக்கைகளை நிருவகித்தனர். புதிய ஏற்பாட்டு சபைகளும் அதற்கொத்த வகையில் நிருவகிக்கப்படுகின் றன. சபையின் மூப்பர்கள் சபை நடவடிக்கைகளைக் கண்காணிக் கின்றனர். அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந் நியோன்னியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்திருந்தார்கள் (அப். 2:42). இதுவே புதிய ஏற்பாட்டுச் சபைகளின் நடைமுறை ஒழுங்காகும்.

### நகர வாசல்

வாசல்களைப் பற்றி வேதத்தில் சுமார் 400 இடங்களில் சொல்லப் பட்டுள்ளது. வாசல் என்னும் வார்த் தைக்குப் பல அர்த்தங்கள் உள் ளன. பொதுவாக நகரத்தைச் சுற்றி, சுவர் கள் கட்டப்படுகின்றன. சில சமயம், இரண்டு சுவர்கள் எழுப்பப்படும். வாசலிலும், சுவர்களின்



மூலைகளிலும் காவல் கோபுரங்கள் கட்டப்படும். அந்தக் கோபுரத்தில் நின்று கொண்டு காவல் செய்யும் காவலாளி கள், நக ரத்திற்கு ஏதாவது ஆபத்து வருமானால், உடனே எச்சரிக்கை பண்ண வேண்டும்.

சில சமயம் உள் சுவர், வெளிச் சுவர் என இரண்டு கட்டப்படுவ துண்டு. இந்த இரண்டு சுவர்களுக்கும் உள்ள இடைவெளி பலவிதங் களில் பயன்படும். வாசல் அழகாகவும், அலங்காரமாகவும் இருக்கும். வாசல்களின் கதவுகள் மரத்தா லானவை. அவை உலோகங்களால் மூடப்பட்டு மிகவும் உறுதியாக இருக்கும். நகர வாசலால் அநேக பயன்கள் உண்டு.

**i. சந்தைவெளி** சாதாரணமாக, மக்கள் நகர வாசலிலே கூடுவார்கள். அது ஒரு சந்தை வெளியாகப் பயன்படுத்தப்பட்டது. நாளை இந்நேரத்தில், சமாரியாவின் வாசலிலே ஒரு மரக்கால் கோதுமை மா ஒரு சேக்கலுக்கும், இரண்டு மரக்கால் வாற்கோதுமை ஒரு சேக்கலுக்கும் விற்கப்படும். (2 இராஜா. 7:1).

**ii. பொது அறிவிப்புக்குரிய இடம்** நகர வாசலிலிருந்த மக்களிடம் எசேக்கியா இராஜா பேசினான். ஜனத்தின்மேல் படைத்தலைவரை வைத்து, அவர்களை நகர வாசலின் வீதியிலே தன்னண்டையில் கூடிவரச் செய்து அவர்களை உற்சாகப்படுத்தினான் (2 நாளா. 32:6). எரேமியா தீர்க்கதரிசி, நகர வாசலிலிருந்து, கர்த்தருடைய செய்தியைச் சொன்னான். "கர்த்தர் என்னை நோக்கி, நீ போய் யூதாவின் ராஜாக்கள் வரத்தும் போக்குமாயிருக்கிற இந்த ஜனங்களின் புத்திரருடைய வாசலிலும் எருசலேமின் எல்லா வாசல்களிலும் நின்றுகொண்டு, அவர்களுடனே சொல்ல வேண்டியது என்னவென்றால், இந்த வாசல்களில் பிரவேசிக்கிற யூதாவின் ராஜாக்களும், எல்லா யூதரும், எருசலேமின் எல்லாக் குடிகளுமாகிய நீங்கள் கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள்" (எரே. 17:19,20).

**iii. நீதி விசாரணை செய்யும் இடம்** (COURT) லோத்து, நகர வாசலிலே நியாயாதிபதியாய் உட்கார்ந்திருந்தான். அந்த இரண்டு

தூதரும் சாயங்காலத்திலே சோதோமுக்கு வந்தார்கள். லோத்து சோதோமின் வாசலிலே உட்கார்ந்திருந்தான் (ஆதி. 19:1). அது நியாயத்தீர்ப்பு வழங்கும் இடம். கர்த்தர் உனக்குக் கொடுக்கும் வாசல்களிலெல்லாம், நியாயாதிபதிகளையும் தலைவரையும் ஏற்படுத்துவாயாக (உபா. 16:18). போவாஸ் எலிமெலேக்கின் வயல் நிலத்தை மீட்டான். போவாஸ் பட்டணத்து மூப்பர் கூடும் இடத்தில் அதைப் பெற்றுக் கொண்டான் (ரூத் 4:9).

**iv. குறியீடான பொருள்** நகர வாசல் என்பது முழுப் பட்டணத்தையும் குறிக்கும். உன் சந்ததியார் தங்கள் பகைஞருடைய வாசல்களை, அதாவது நாடுகளைச் சுதந்தரித்துக் கொள்வார்களாக (ஆதி. 24:60). நகரத்தின் மகிமை, நகரத்தின் வாசல்களைச் சார்ந்தது. புதிய எருசலேமின் பன்னிரண்டு வாசல்களும் பன்னிரெண்டு முத்துக்களாயிருந்தன. ஒவ்வொரு வாசலும் ஒரு முத்தாயிருந்தது. நகரத்தின் வீதி தெளிவுள்ள பளிங்கு போலச் சுத்தப் பொன்னாயிருந்தது (வெளி. 21:21). தங்கள் பலத்துக்கும், இராணுவ வல்லமைக்கும் குறியீடாக வாசல்கள் கருதப்பட்டன. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன், பாதாளத்தின் வாசல்கள் (வல்லமை) அதை மேற்கொள்ளுவதில்லை (மத். 16:18). பாதாளம் உண்மையான சபையை ஜெயிக்க முடியாது.

**v. ஆவிக்குரிய பொருள்** வாசல் (கதவு) தான் பட்டணத்துக்குள்ளே போக ஒரே வழி. இரட்சிப்படைவதற்குக் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தான் ஒரே வழி. நானே வாசல். ஒருவன் என் வழியாய் உட்பிரவேசித்தால், அவன் இரட்சிக்கப்படுவான் (யோவான் 10:9). தேவனுடைய சமுகத்திலே போவதற்கு இயேசு கிறிஸ்து தான் ஒரே வழி. அங்கே நமக்குப் பாதுகாப்பு கிடைக்கும். இயேசு கிறிஸ்து மூலமாய், தேவனிடத்தில் வருகிற அனைவருக்கும் ஜீவனும் பாதுகாப்பும் கிடைக்கும். ■

## 6. அரசாங்கம்

### படையும் போர்வீரர்களும்

நமது தேவன் சேனைகளின் தேவனாக இருக்கிறார் (ஆதி. 32:2). அவர் கர்த்தருடைய சேனையின் அதிபதியாகவும் திகழ்கிறார் (யோசுவா 5:14). தேவன்தாமே அதிபதியாக விளங்கி, எகிப்தினின்று விடுதலை பெற்றுவந்த தமது மக்களை வனாந்திரப் பயணத்தில் வழிநடத்தினார். அந்நாட்களில் மோசேயும், பின்னர் யோசுவாவும் தேவனுடைய மக்களை சேனைகளின் அதிபதியாகிய கர்த்தருக்குக் கீழாக வழிநடத்தினர்.

நியாயாதிபதிகளின் நாட்களில் இஸ்ரவேல் படை அமைக்கப் பட்டது. வேற்றின மக்களோடு போரிடுவதற்கென்றும் இக்கட்டான சூழ்நிலைகளிலும் இஸ்ரவேலில் படைவீரர்கள் ஒன்று திரட்டப்பட் டனர். அரசர்களின் காலத்தில் போர்ப்படையானது கூடுதல் வலுவாக் கப்பட்டது. இஸ்ரவேலின் முதல் அரசனாகிய சவுலின் காலத்தில் அந்நாட்டில் 3000 வீரர்கள் கொண்ட படை இருந்தது (1 சாமு. 13:22).

தாவீது அரசனின் காலத்தில் இஸ்ரவேல் சேனை விரிவாக்கப்பட்டு சீரமைக்கப்பட்டது. அவனுடைய சேனையில் பலர் வீர தீரச் செயல் களைச் செய்தவர்களாகவும் உண்மையுள்ளவர்களாகவும் திகழ்ந் தனர். அவன் பெலிஸ்தரோடு போரிட்டு தனது நாட்டை விரிவு படுத்தினான்.

புதிய ஏற்பாட்டுக் காலத்தில் இஸ்ரவேல் நாட்டில் ரோமப் போர் வீரர்களே இருந்தனர். அந்தப் போர்வீரர்கள் தகுந்த பயிற்சி பெற்றவர் களும், பலம் வாய்ந்தவர்களும், துணிவுமிக்கவர்களும், கொடூரம் நிறைந்தவர்களுமாயிருந்தனர். ரோமப் பேரரசர்கள் இப்படிப்பட்ட போர் வீரர்களைக் கொண்டே நாட்டின் அமைதியையும் பாதுகாப்பையும் நிலைநாட்டினர். நூற்றுக்கு அதிபதி என்று அழைக்கப்பட்ட தலை வனுக்குக் கீழாக நூறு படைவீரர்கள் பணியாற்றினர். நூற்றுக்கு அதிபதியின் கட்டளைகளுக்கு, அவன்கீழ் பணிபுரியும் வீரர்கள் அனை வரும் முற்றிலும் கீழ்ப்படிய வேண்டும். கர்த்தராகிய இயேசு கிறிஸ் துவை அவமானப்படுத்தி இழிவுபடுத்தியவர்களும் இவர்களே.

இரண்டாண்டுக் காலம் ரோமாபுரியிலே அப்போஸ்தலனாகிய பவுல் ஒரு வீட்டில் சிறைவைக்கப்பட்டிருந்தார். ரோமப்போர் வீரர்கள்

இருவர் தொடர்ந்து பவுலைக் காவல் காத்தனர். அவர்கள் தங்களுக்கு அளிக்கப்பட்ட நேரக்கணக்கின்படி மாறிமாறி அலுவல் புரிந்தனர். பவுலின் சிறையிருப்புகள் பல ரோமப் போர்வீரர்களின் மறுபிறப்பிற்கு வகைசெய்தது என்று எண்ண ஏதுவுண்டு (பிலி. 1:12,13).

ரோமப் போர்வீரர்கள் அணிந்திருந்த படைக்கலன்கள் பவுலின் சிந்தைக்கு ஆவிக்குரிய பொருள் கொண்டதாக விளங்கின. "சத்தியம் v‹ D « *கச்சையை* உங்கள் அரையில் கட்டினவர்களாயும், நீதியென்னும் *மார்க்கவசத்தைத்* தரித்தவர்களாயும், சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் *பாதரட்சையைக்* கால்களிலே தொடுத்தவர்களாயும், பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்களையெல்லாம் அவித்துப்போடத்தக்கதாய், எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாசமென்னும் *கேடகத்தைப்* பிடித்துக் கொண்டவர்களாயும் நில்லுங்கள். இரட்சணியமென்னும் *தலைச்சீராவையும்*, தேவவசனமாகிய ஆவியின் *பட்டயத்தையும்* எடுத்துக் கொள்ளுங்கள்" (எபே. 6:14-17).



மேற்கூறியவற்றில் தேவ வசனமாகிய ஆவியின் பட்டயம் ஒன்று மட்டுமே எதிரியைத் தாக்க வல்லதாயிருக்கிறது. மற்றவை யாவும் நம்மைப் பாதுகாக்கும் படைக்கலன்களாக விளங்குகின்றன. தேவ வசனமாகிய ஆவியின் பட்டயத்தை நாம் வல்ல ஆயுதமாகப் பயன்படுத்த வேண்டும். பொல்லாங்கனாகிய சாத்தானை முறியடிக்க இந்தப் படைக்கலன் மிகவும் இன்றியமையாதது. வனாந்திரத்தில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சாத்தானால் பரீட்சிக்கப்பட்ட வேளையில் இவ்வாயுதத்தைக் கொண்டே அவனை முறியடித்தார். ஜெபம் என்னும் இன்னுமொரு ஆற்றல்மிக்க படைக்கலனை விசுவாசி உடையவனாக இருக்கிறான். முடங்கால்களை முடக்கி, தேவனிடம் ஏறெடுக்கப்படும் மன்றாட்டு விசுவாச வரலாற்றில் மாபெரும் வெற்றிகளைத் தேடித்தந்துள்ளது (எபே. 6:18). ஆவிக்குரிய யுத்தத்தில் தீய ஆவிகளோடு போரிட, சிலுவையின் போர்வீரர்களாகிய நாம் சர்வாயுதவர்க்கத்தை அணிந்திருப்பது இன்றியமையாதது அல்லவா? ■

## 7. யூத சமுதாயம்

### அ. மக்கபேயர்கள்

மத்தியாஸ் என்னும் பிரதான ஆசாரியனின் மரபுப் பெயரே 'மெக்க பீஸ்' என்பதாகும். அவன் யூத மக்களிடையே மிகவும் புகழ்வாய்ந் தவனாக விளங்கினான். பின்னர், அவன் வழிவந்தோரும் அவனைப் பின்பற்றிய கூட்டத்தாரும் அப்பெயரினைப் பெற்றனர். பாலஸ்தீன நாட்டை மகா அலெக்ஸாண்டனர் வெற்றி கொண்டான். அம்மாமன்ன னின் மரணத்திற்குப் பின்னர் அவனுடைய படைத் தளபதிகள் பாலஸ் தீனத்தை ஆண்டு வந்தனர். சீரிய அரசனாகிய ஆண்டியோகஸ் எபி பெனஸ் என்பவனுடைய ஆட்சிக் காலத்தில் கிரேக்க சமயத்தையும், கிரேக்க மொழியையும் யூத நாட்டில் புகுத்த முயற்சி செய்தான். மேலும் யூதர்களுடைய முறைமையாகிய விருத்தசேதனம் மற்றும் ஓய்வுநாள் அனுசரிப்பு ஆகியவற்றைத் தடைசெய்தான்.

எருசலேம் தேவாலயத்தில் புறஇன மக்கள் செலுத்தும் பலிகளை செலுத்தும்படியும், விலைமகள் பழக்கத்தையும் தோற்றுவித்தான். உண்மையுள்ள யூதர்கள் கொடுமைக்கும் அவமானத்திற்கும் ஆளா யினர். மோடீன் என்னும் நகரில் வாழ்ந்த மத்தியாஸ் என்னும் ஆசாரி யன், அரசனை எதிர்த்துப் போராடினான். தன் ஆண்மக்களோடு சேர்ந்து கொரில்லா போர் முறையைக் கையாண்ட மத்தியாஸ் கொலையுண் டான். அவனுடைய மூன்றாவது மகன் யூதாஸ் தொடர்ந்து சீரிய நாட்டு மன்னனோடு போர் புரிந்தான். கி. மு. 165 -இல் தனது படைவீரர்களோடு எருசலேம் நகருக்குள் சென்ற யூதாஸ் தேவாலயத்தைத் தூய்மைப் படுத்தி, மீண்டும் தேவாராதனை தொடரும்படிச் செய்தான்.

யூதாசுக்கும் பின்னர் யோனத்தான் தொடர்ந்து சீரிய அரசனை எதிர்த்து கொரில்லா போரில் ஈடுபட்டான். யூதேயா நாட்டை அவன் சில காலம் திறம்பட ஆட்சி செய்தான். கி. மு. 150 -இல் மக்கள் ஆட்சியை அவன் நிறுவினான். அதன் பின்னர் சீமோன் ஆட்சியை ஏற்றுக் கொண்டான். கி. மு. 104 -இல் அவனுடைய மகன் அரிஸ்டோபுலஸ் ஆட் சிக்கு வந்து இரண்டாண்டுக் காலமே அரசாட்சி புரிந்தான். ஆனால் அவனுக்குப் பின்வந்த அவனுடைய குமாரர்கள் ஆட்சியை கைப்பற்றத் தங்களுக்குள்ளாகச் சண்டையிட்டுக் கொண்டனர். பிரதான ஆசாரிய


வழியில் வந்த கடைசி அரசனாகிய ஆண்டிகோனியஸ் ரோமர்களால் கி. மு. 37 - இல் கொலைசெய்யப்பட்டான். மெக்கபீஸ் ஆட்சி அத்துடன் முடிவடைந்துபோயிற்று.

## ஆ. பரிசேயர்கள்




பிரித்தெடுக்கப்பட்டவர்கள் என்பதே "பரிசேயர்" என்னும் சொல்லின் பொருளாகும். சமுதாயத்திலிருந்து அவர்கள் பிரிந்து வாழ்ந்தனர். இஸ்ரவேல் நாட்டின் சமயத்தை தங்களுடைய ஆளுகைக்குள்ளாக வைத்துக்கொள்ள வேண்டுமென்ற எண்ணத்தில் அவர்கள் செயல் புரிந்தனர். யூதர்களுடைய ஆலோசனைச் சங்கத்தில் ஆதிக்கம் செலுத்தத்தக்கபடி பதவி வகித்தனர். அவர்களே யூதர்களின் தலைவர்களாகத் திகழ்ந்தனர். மனித வரலாற்றின் இறுதியில் தேவன் தலையிட்டு எல்லாவற்றையும் அவரே முடிவு கட்டுவார் என்ற நம்பிக்கையுடையவர்களாக அவர்கள் விளங்கினர். மேலும் மனிதன் மரித்தபின் கடைசி நாட்களில் உயிர்த்தெழுவான் என்னும் கொள்கையிலும் அவர்கள் நம்பிக்கை கொண்டிருந்தனர். சதுசேயரோ இவ்வுண்மையை நம்பவில்லை.

நியாயப்பிரமாணத்திலும், பாரம்பரியச் சடங்குகளிலும் தேவனுடைய சித்தம் விளங்குகிறது என்ற கொள்கையில் வைராக்கியம் உடையவர்கள். மேலும் அந்த நியாயப்பிரமாணத்திற்கு விளக்கம் அளிப்பதற்குத் தாங்கள் உரிமைபெற்றவர்கள் என்றும் நம்பினர். உயர்ந்த நன்னெறியைக் கடைப்பிடித்தனர். நீதிநெறிக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்றும் போதித்தனர். பரிசேயர்கள் அல்லாதோருடைய வீடுகளில் உணவருந்த மாட்டார்கள். தசம பாகம் கொடுப்பதில் தவறாது இருந்தனர். தசமபாகம் தருவதில் உறுதியுடன் விளங்கி, தேவனுக்கு உண்மையுள்ளவர்கள் என்பதை வெளிப்படுத்தினர்.



## இ. சதுசேயர்கள்



"சாதோக்கு" என்னும் பெயரிலிருந்து மருவிவந்ததே "சதுசேயர்கள்" என்னும் சொல்லாகும். சாதோக்கு என்னும் பெயருடைய ஆசாரியனின் மரபில் தோன்றியவர்கள் இப்பெயர் பெற்றனர். பெரும்பாலும் ஒரு அரசியல் கட்சி போன்று அவர்கள் செயல்பட்டனர். சதுசேயர்கள் பரிசேயர்களை எதிர்த்து நின்றனர். தம்மையொத்த மனிதர்களிடம் மிகவும் கடுமையாகவே நடந்து கொண்டனர். பெருஞ்செல்வந்தர்களாக விளங்கிய இக்கூட்டத்தார், மற்றவர்களிடம் குறைகண்டு கடுமையாகக் குற்றஞ்சாட்டக் கூடியவர்களாக விளங்கினர். அதிகாரம் மிக்க ஆசாரியர் குடும்பங்களில் தோன்றிய இவர்கள் ஆலோசனைச் சங்கத்திலும் செல்வாக்கு மிக்கவர்களாக விளங்கினர். ஏரோது அரசர்கள் மற்றும் ரோம அரசாங்கத்தினருக்குக் கீழாகச் செயல்பட்ட ஆலோசனைச் சங்கத்தில் பிரபலமாக விளங்கிய சதுசேயர் நாளடைவில் வலுக்குன்றிப் போயினர். தேவாலயம் கி. பி. 70 ஆண்டு அழிவிற்குட்பட்ட பிறகு, இவர்களுடைய எண்ணிக்கை நலிந்து போயிற்று. சமயக் கொள்கையில் மாறுதலைப் பெரிதும் விரும்பாத இம்மக்கள் மரித்தோரின் உயிர்த்தெழுதலை நம்பவில்லை. மனிதர்களுடைய செழிப்பும், அவர்களுடைய தாழ்வும் அவரவருடைய நடக்கையின் விளைபயன் என்றே இக்கூட்டத்தினர் கருதினர்.

## 8. யூதருடைய பண்டிகைகள்


சமயத்தின் அடிப்படையில் சில நாட்கள் அல்லது குறிப்பிட்ட காலத்தைக் குறித்துக்கொண்டு மகிழ்ச்சிக்குரிய வகையில் கொண்டாடப்படுவதைப் பண்டிகைகள் என்று கூறுகிறோம். வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பண்டிகைகளின் தொடக்கமும், நோக்கமும், பொருளும் பிற மதங்களின் பண்டிகைகளிலிருந்து முற்றும் வேறுபட்டவை. தேவனிடத்திலிருந்து பெற்றுக்கொண்ட நன்மைகளை நினைவு கூர்ந்து குறிப்பிட்ட காலங்களில் சில விழாக்களை இஸ்ரவேல் மக்கள் கொண்டாடினர். அப்பண்டிகைகளின் வாயிலாக, தமது மக்களின் வாழ்க்கையில் தேவன் ஈடுபட்ட நிகழ்ச்சிகளை நினைவு கூர்ந்தனர்.

பண்டிகைக் காலங்களில் தேவனுக்குப் பலிகளையும் காணிக்கைகளையும் செலுத்தி, தாங்கள் பெற்ற சிலாக்கியத்தை உளமார்ந்த மகிழ்ச்சியோடு வெளிப்படுத்தினர் (எண். 9:7). உண்ணுதலும், குடித்தலும், களியாட்டமும் அக்காலங்களில் மக்களிடையே காணப்படும்.

மக்கள் தங்களது மனவருத்தத்தை வெளிப்படுத்தும் வகையிலும் சில பண்டிகைகளைக் கொண்டாடினர். பக்திமிக்க யூதர்கள், தங்களுடைய பாவத்தின் பொருட்டு பலிசெலுத்தி, கவனத்தோடு அக்கற்பனைகளைக் கைக்கொண்டனர். இஸ்ரவேல் மக்கள் கொண்டாடிய ஏழு பண்டிகைகளாவன: 1. பஸ்கா பண்டிகை 2. வாரங்களின் பண்டிகை 3. கூடாரப் பண்டிகை 4. ஓய்வு நாள் பண்டிகை 5. எக்காளப் பண்டிகை 6. பாவநிவாரண நாள் 7. பூரிம் பண்டிகை. இவற்றைக் குறித்துச் சற்று விரிவாகக் காணலாம்.

## அ. பஸ்கா பண்டிகையும் புளிப்பில்லா அப்பப் பண்டிகையும்

இஸ்ரவேல் மக்கள் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து தாங்கள் அடைந்த விடுதலையை நினைவுகூர்ந்து கொண்டாடும் பண்டிகையே இது. பஸ்கா என்பது மரணத்திலிருந்து காப்பாற்றப்படுதல் என்று பொருள்படும் (யாத். 12:13). பஸ்கா ஆட்டின் இரத்தம் எந்தெந்த வீடுகளின் நிலைக்கால்களில் தெளிக்கப்பட்டிருந்ததோ அந்த வீடுகளின் முதற் பிறந்த அனைத்தையும் தேவன் அழிக்காமல் கடந்து சென்றார்.




ஆபீப் (நிஸான்) என்னும் மாதமே யூதர்களுடைய முதலாம் மாதம். அந்த மாதத்தில் 14 -ஆம் நாளில் பஸ்கா பண்டிகை கொண்டாடப்பட்டது (யாத். 12:2). அன்று ஒரு ஆட்டுக்குட்டியைப் பலியாகச் செலுத்துவார்கள். அந்த ஆட்டுக்குட்டி பஸ்கா ஆட்டுக்குட்டி என்று அழைக்கப்படும். கிறிஸ்தவ விசுவாசிகள் அனுபவிக்கும் கர்த்தருடைய பந்திக்கும் பஸ்கா பண்டிகைக்கும் ஓர் ஒற்றுமை இருக்கிறது. நமக்காக அடிக்கப்பட்ட பஸ்காவாகிய கிறிஸ்து என்று 1 கொரிந்தியர் 5:7 -இல் காண்கிறோம். கி. பி. 70 -இல் எருசலேம் நகரில் இருந்த ஆலயம் அழிக்கப்பட்ட பிறகு, பஸ்கா பலி செலுத்தப்படுவது நின்று போயிற்று. ஆயினும் யூதக் குடும்பங்களில் இப்பண்டிகை இன்னும் தொடர்கிறது.

பஸ்கா பண்டிகைக்கு அடுத்த நாளிலிருந்து தொடர்ந்து ஏழு நாட்களுக்கு இஸ்ரவேல் மக்கள் புளிப்பில்லா அப்பத்தை உண்ண

வேண்டும். புளிப்பு பாவத்தைக் குறிக்கிறது. பழைய புளித்த மாவோடே அல்ல, துர்க்குணம் பொல்லாப்பு என்னும் புளித்தமாவோடும் அல்ல, துப்புரவு உண்மை என்னும் புளிப்பில்லாத அப்பத்தோடே பண்டிகையை ஆசரிக்கக்கடவோம் (1 கொரி. 5:8). எந்நாளும் நாம் கடைப்பிக்க வேண்டிய பரிசுத்த வாழ்க்கை முறையை இது குறிக்கிறது.

## ஆ. வாரங்களின் பண்டிகை

இ்.து அறுவடையின் பண்டிகை என்றும் அழைக்கப்படுகிறது (லேவி. 23:16). முதற் கனியின் படைப்பு என்றும் இது பெயர்பெற்றது. தேசத்தின் முதற்கனிகளில் அனைத்தையும் ஒரு கூடையில் போட்டு, தேவன் தெரிந்து கொண்ட சந்நிதிக்கு அதைக் கொண்டு போய், ஆசாரியனிடத்தில் கொடுத்து அசைவாட்டவேண்டும் (உபா. 26:10). இவ்வாறு அவர்கள் தேவனைத் தொழுதுகொள்ள வேண்டும்.




தாங்கள் எகிப்து நாட்டில் அடிமைகளாக இருந்ததை நினைவு கூர்ந்து, கர்த்தருடைய சமுகத்தில் அறிக்கை செய்யவேண்டும். எகிப்திலிருந்து அவர்களை தேவன் விடுதலை செய்து, பாலும் தேனும் ஓடுகிற தேசத்திற்குக் கொண்டு வந்து, எல்லா நன்மைகளையும் கொடுத்தார் என்று சொல்லி, கர்த்தருடைய சமுகத்தில் களிகூர வேண்டும் (உபா. 26:11). அது களிகூருதலின் நாளாகும், நன்றியறிதலின் நாளாகும்.

கர்த்தருடைய உயிர்த்தெழுதலைக் குறிக்கும் முதற்கனியாகிய கதிர்க்கட்டு அசைவாட்டப்படும் நாளிலிருந்து 50 -ஆவது நாளில் பெந்தெகொஸ்தே பண்டிகை கொண்டாடப்படும். அது வாற்கோதுமை அறுப்பின் முடிவைக் காண்பிக்கிறது. பெந்தெகொஸ்தே நாளில் சீஷர்கள் எருசலேமில் கூடினார்கள் என்பதை நாம் புதிய ஏற்பாட்டில் காண்கிறோம் (அப். 2:1). பரிசுத்த ஆவியானவர் அவர்கள்மேல் இறங்கினார் (அப். 2:3). அப்பொழுது யோவேலின் தீர்க்கதரிசனம் நிறைவேறுகிறதாக பேதுரு எடுத்துரைத்தார்

அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு மொழிகளிலே பேசினார்கள் (வச. 4). அவர்கள் தேவனுடைய மகத்துவங்களைப் பேசினார்கள் (வச. 11). சங்கீதத்திலிருந்து மேற்கோள்களைக்

காட்டி கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் குறித்து பேதுரு பேசினார். செய்தியைக் கேட்ட மக்கள் இருதயத்தில் குத்தப்பட்டவர்களாகி, தங்களுடைய பாவத்தை உணர்ந்தார்கள். பேதுரு உரைத்த வார்த்தையைச் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டவர்கள் (விசுவாசித்தவர்கள்) ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றையத் தினம் ஏறக்குறைய மூவாயிரம் பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள் (வச. 41). அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும் (ஆராதனை), ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள் (அப். 2:42). அது பரிசுத்த ஆவியானவராகிய தேவனின் வல்லமையுள்ள செயலாக்கமாகும்.

## இ. கூடாரப் பண்டிகை



கூடாரப் பண்டிகை ஏழு நாட்கள் ஆசரிக்கப்பட வேண்டும். முதலாம் நாளும், கடைசி நாளும் சபை கூடும் பரிசுத்த நாட்களாகும். நிலத்தின் பலன் சேர்க்கப்பட்டு, பேரீச்சின் ஓலைகளாலும் தழைத்திருக்கிற விருட்சங்களின் கிளைகளாலும் செய்யப்பட்ட கூடாரங்களில் மக்கள் குடியிருப்பார்கள் (லேவி. 23:39-43). ஆசரிப்புக் கூடாரத்திலே மக்கள் சபையாகக் கூடுவார்கள். அந்த நாட்களில் ஆசரிப்புக் கூடாரம் இடம் பெயர்ந்து கொண்டுபோகக் கூடியதாக இருந்தது.

யூதருடைய ஆண்டிலே மூன்று முறை சபை கூடுதல் இருக்கும். கூடாரப் பண்டிகை அவற்றில் ஒன்றாகும். அது மகிழ்ச்சிக்குரிய காலமாகும் (உபா. 16:14). ஏழு நாட்களும் கர்த்தருக்குப் பலிசெலுத்துவார்கள். தேவனே மழையைப் பொழியச் செய்கிறவராக இருக்கிறார் என்பதற்கு நன்றி செலுத்துகிற பண்டிகையாக அது விளங்கியது. இஸ்ரவேலர் எகிப்திலிருந்து வந்தபோது அவர்கள் வனாந்தரத்தில் கூடாரங்களில் வசித்ததை நினைவுகூரும் பண்டிகையாகவும் இது விளங்கிற்று (லேவி. 23:43).

## ஈ. ஓய்வுநாள் பண்டிகை

பரிசுத்த ஓய்வுநாள் மனமகிழ்ச்சியின் நாளாகும். அந்நாளில் ஏதொரு வேலையும் செய்யாமல் மக்கள் கர்த்தரில் மனமகிழ்ச்சியாக இருப்பார்கள் (ஏசா. 58:13). சிருஷ்டிப்பு ஆறு நாட்கள் நடந்தன. ஏழாம்

நாளில் தேவன் ஓய்ந்திருந்தார். அன்று தேவன் தம் கிரியை யாவற்றையும் முடித்து ஓய்ந்திருந்தார். அவருக்கு இளைப்பாறுதல் தேவையில்லை. அவர் களைப்படையவும் இல்லை. மனிதன் பின்பற்றுவதற்கென்று ஓய்வுநாள் மாதிரியாக நிறுவப்பட்டது (யாத். 20:11). தெய் வீக மாதிரியை ஏற்படுத்தி மனிதன் ஆறுநாட்களும் வேலை செய்து ஏழாம் நாளில் வேலை செய்யாது ஓய்ந்திருக்க வேண்டும் என்று தேவன் இதை ஏற்படுத்தினார். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தம்மை ஓய்வு நாளுக்கும் ஆண்டவர் என்று வெளிப்படுத்தினார் (மாற்கு 2:28).

## உ. எக்காளப் பண்டிகை (எண். 29:1)

ஏழாம் மாதம் முதலாம் நாள் இப்பண்டிகை கொண்டாடப்படும். இது பரிசுத்த சபைகூடும் நாள். அந்நாளில் ஒரு வேலையும் செய்யலாகாது. அந்த நாளில் எக்காளம் ஊத வேண்டும். கர்த்தருக்கு தகன பலியும் செலுத்த வேண்டும். அந்நாளில் அதைக் குறித்த வேத பகுதிகள் வாசிக்கப்படவேண்டும்.

## ஊ. பாவநிவர்த்தி நாள் (யாத். 30:10)

ஏழாம் மாதம் பத்தாம் தேதியில் இது ஆசரிக்கப்படும். அது பரிசுத்த சபைகூடும் நாளாகும். இது பாவத்திற்காக பலி செலுத்தும் நாளாகும். ஆண்டிற்கு ஒரு முறை அனுசரிக்கப்படும் பாவநிவாரணபலி, கர்த்தராகிய இயேசு கிறிஸ்து பாவநிவாரணராகப் பலிசெலுத்தப்பட்டதிற்கு நிழலாக உள்ளது என்று எபிரெய நிருபத்தில் காண்கிறோம். ஆகவே விசுவாசிகள் கிறிஸ்துவின் மூலமாக தேவனுடைய கிருபாசனத்தண்டையில் சேரக்கூடியவர்களாயிருக்கின்றனர்.

## எ. பூரிம் பண்டிகை

எஸ்தர் 9 -ஆவது அதிகாரத்தில் இதனுடைய விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. அகாஸ்வேரு என்னும் அரசனின் காலத்தில் மொர்தெகாய் இப்பண்டிகையை நிறுவினான். பூரிம் பண்டிகை நாளை இஸ்ரவேலர் விருந்துண்டு சந்தோஷமாய்க் கொண்டாடினர். பகைஞனாகிய ஆமான் என்பவனுடைய பொல்லாங்கான திட்டங்களிலிருந்து யூதர்கள் விடுவிக்கப்பட்ட நாளை நினைவுகூர்ந்து இப்பண்டிகை கொண்டாடப்பட்டது. மெக்கபேயரால் கி. மு. 164 - இல் எருசலேமில் தேவாலயம் சுத்திகரிக்கப்பட்டு மீட்கப்பட்ட நிகழ்ச்சியை நினைவுகூர்ந்து இப்பண்டிகை பின்னர் கொண்டாடப்பட்டது. ஒளியின் பண்டிகை என்றும் இது பெயர்பெற்றது. ■



# வேதாகம நாட்டின் வாழ்க்கை முறைகள்

இந்நூல் பரிசுத்த வேதாகமத்தை நேசித்து, தியானிப்பவர் களுக்கு ஒரு சிறந்த துணை நூலாகும். புதிய ஏற்பாடு எழுதப்பட்டு இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னர் வாழ்ந்து கொண்டிருக்கிற நாம், வேதாகம நாட்டின் பண்பாடு, பழக்க வழக்கங்களை அறிவ தால் அதன் உண்மையான கருத்தை உள்ளவாறு புரிந்துகொள்ள முடியும். திருமறையைத் தியானிக்கிறவர்கள் அதனைத் தெளிவான முறையில் அறிந்துகொள்ள இந்நூல் பெரிதும் உதவும்.

நூலாசிரியர் 1958 -இல் இரட்சிப்பின் அனுபவத்தைப் பெற்றார். பள்ளி ஆசிரியராகப் பணியாற்றிக்கொண்டிருந்த இவர் 1968 -ஆம் ஆண்டு தமது அலுவலைத் துறந்து, கர்த்தருடைய முழு நேரப் பணிக்கெனத் தம்மை ஒப்புவித்தார். அதுமுதல் சென்னையில் உள்ள பல சபைகளில் ஊழியத்தைச் செய்துவருகிறார். எம்மாவு வேதாகமப் பாடசாலையின் இந்தியக் கிளைத் தலைவராகப் பணி யாற்றி, அதின் வேதபாடங்களை பல இந்திய மொழிகளில் மொழி பெயர்க்கவும், அவ்வூழியம் வளரவும் காரணமாயிருந்தார். தற் பொழுது வேதாகமப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் கர்த்தருடைய வேதத்தைப் போதித்து வருகிறார்.

**வேதாகம நாட்டுப் பண்பாடு**

ISBN 81-907600-0-9

MORIAH MINISTRIES

9 788190 760003 00030